24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 134 | பங்குனி 27ஆம் நாள் | புதன்கிழமை | 10 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050


## நிலாவரையில் கைக்குண்டு வெடிப்பு: சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.10

விளையாட்டுப் பொருள் என்று நினைத்து கைக் குண்டை எறிந்து விளையாடிய சிறுவன் கைக் குண்டு வெடித்துப் படுகாயமடைந்தான். இந்தச் சம்பவம் நேற்று மதியம் புத்தூர் மேற்கு, நிலாவரையில் நடந்துள்ளது.

சிவனேஸ்வரன் சிந்துஜன் (வயது-14) என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளார். சிந்துஜன் தோட்டத்துக்குச் சென்று திரும்பும் வழியில் வெற்றுக் காணியில் கைக் குண்டு தென்பட்டுள்ளது. அதை விளை

>> 21

## குடும்பத் தகராறைத் தடுக்க சென்ற பொலிஸ் மீது தாக்கு!

*அச்சுவேலியில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஏப்.10

குடும்பப் பிணக்கை விசாரிக்கச் சென்ற பொலிஸ் அவலுவலர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு அச்சுவேலியில் நடந்துள்ளது. வெளிநாட்டில் இருந்து வந்த

>> 21

## கிணற்றில் வீழ்ந்த யுவதி உயிரிழப்பு

தென்மராட்சி, ஏப்.10

ஆழமான கிணற்றில் தவறி வீழ்ந்த யுவதி சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கைதடி மத்தியில் நடந்துள்ளது. கைதடி மத்தி,

>> 21

## பங்குனித் திங்களிலும் திருடர்கள் கைவரிசை

***20 பவுண் நகைகள் "அபேஸ்"***

சாவகச்சேரி, ஏப்.10

பங்குனித் திங்கள் இறுதிநாளான நேற்றுமுன்தினம் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு வந்த பக்தர்களிடம் திருடர்கள் தமது கைவரியைக் காட்டியுள்ளனர். சுமார் 20 பவுண் தங்கநகைகள் திருடப்பட்டுள்ளன. பங்குனித் திங்கள் இறுதிநாள் வழி

>> 21

# மெல்ல உடைகின்றது கை – மொட்டுக் கூட்டு

## ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கி இரு தரப்பினரும் தினம் தினம் கருத்து

**கொழும்பு, ஏப்ரல் 10**

**கடந்த ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் ஊடாக இணைந்துகொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையே தற்போது முரண்பாடுகள் வலுப்பெற்றுள்ளன. இரு கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கிக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அதனால் எதிர்வரும் தேர்தல்களில் அந்த இரு கட்சியினரும் கூட்டு வைத்துப் போட்டியிடுவது சந்தேகத்துக்கிடமான விடயமாக மாறியுள்ளது.**

>> 21

## அதிக சத்தம் எழுப்பும் "ஹோர்ன்"களுக்கு இனித் தடை

கொழும்பு, ஏப்.10

மோட்டார் வாகனங்களில் அதிக ஒலி எழுப்பும் "ஹோர்ன்"களை பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது அதை உபயோகிப்பவர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை நீக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்

>> 23

## பாண்டியன்குளத்தில் நேற்றுச் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஏப்.10

முல்லைத்தீவு, மாந்தைகிழக்கு, பாண்டியன் குளத்தில் நேற்றுச் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் காணாமல் போயிருந்த மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆடை மற்றும் தடயப் பொருள்களை வைத்து அவர் பாலசிங்கம் ஜெயபவான் (வயது-45) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். இவர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் பெற்றோருடன் வசித்து வந்தார். கடந்த 22ஆம் திகதி காணாமல் போயிருந்

>> 23

## கடலட்டை பிடிப்போரை தடுப்பது சரியல்லவாம்!

*மனித உரிமைகள் ஆணைக்குழு மாவட்டச் செயலகத்துக்குக் கடிதம்*

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடலட்டை பிடிப்பவர்களைத் தடை செய்வது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்க முடியாது. அவர்கள் தொழில் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் த.கனகராஜ் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு எழுத்தில் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுபவர்களைத் தடை செய்ய வேண்டும் என்று குடாநாட்டு மீனவர்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து

>> 21

## கொழும்பில் 11 பேர் கடத்தல்: விசாரணை தொடர்கின்றது

கொழும்பு, ஏப்.10

கொழும்பு மற்றும் அதை அண்டிய பகுதிகளில் ஐந்து மாணவர்கள் உட்படப் 11 பேர் கடத்திக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டாம் சந்தேகநபராக உள்ள சுமித் ரணசிங்கவின் கீழ் செயற்பட்ட சிறப்புப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் விசா

>> 21

## கடற்படைக்காக மண்டைதீவில் காணி சுவீகரிக்க தீவிர முயற்சி

### நாளை அளவீடு நடைபெறும் என்று நில அளவைத் திணைக்களம் அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாணம், வேலணை பிரதேச செயலர் பிரிவில் கடற்படை முகாம் அமைப்பதற்கு 18 ஏக்கர் 1 நூட் 10 பேர்ச்சஸ் அளவுடைய காணி கையகப்படுத்தப்படவுள்ளது. அந்தக் காணி நாளை அளவீடு செய்யப்படவுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிகள் 11 பேருக்குச் சொந்தமான காணிகளாகும். இந்தக் காணிகளை கையகப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன

>> 21


see more news in
newuthayan.com


## சோடாவென மண்ணெண்ணை அருந்திய சிறுவன் சிகிச்சையில்

சாவகச்சேரி, ஏப்.10

தாகத்தில் சோடா என நினைத்து மண்ணெண்ணையை அருந்திய 6 வயதுச் சிறுவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். இந்தச் சம்பவம் நேற்றுக் கைதடியில் நடந்துள்ளது.

நேற்றுக் காலை புலம்பெயர் நாட்டில் இருந்து ஒரு குடும்பத்தினர்

>> 23

## தனியார் காணியைப் பௌத்த மடத்துக்கு வழங்கிய வவு. வடக்கு பிரதேச செயலகம்!

### இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய உரிமையாளரான பெண் முறைப்பாடு

வவுனியா, ஏப்.10

தனது காணியில் தனது அனுமதி இல்லாமல் பௌத்த மடம் அமைக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள பெண் ஒருவர் தனது காணியைத் தனக்கு மீளத் தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா, கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்த விகாரையின் பின்புறமாக உள்ள காணியில், விகாரையைப் பராமரிக்கும் பிக்கு மற்றும் சிலர் தங்குவதற்கு இரு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது இந்தியாவில் இருந்து நாடு திரும்பியுள்ள பெண் ஒருவர் அந்தக் காணிகளுக்கு உரிமை கோருகின்றார். அந்த இரு விடுதிகள்

>> 21




2019
அக்கறையின்
வரவு செலவுத் திட்டம்

மக்களுக்கு வலிமையும் பலமும்

# புதுத் தம்பதியினருக்கு புது வீடொன்றை அமைக்க ரூ.10 மில்லியன்

2019



தமக்கென சொந்த வீடொன்று காணப்பட வேண்டுமென்பதே திருமணம் செய்யும் ஒவ்வொரு புதுமணத் தம்பதியினரதும் பிரார்த்தனையாகும். அவர்களது எதிர்காலத்தை கட்டியெழுப்பும் அந்த அன்பான பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கு புதிய வரவு செலவுத் திட்டத்தில் புதிதாக திருமணம் செய்யும் தம்பதியினருக்கு 10 மில்லியன் ரூபாவுக்கான வீடமைப்பு கடன் வழங்கப்படுகின்றது. "ஹோம் ஸ்வீட் ஹோம்" கடன் திட்டத்தின் கீழ் 6% குறைந்த வட்டிக்கே கடன் வழங்கப்படுகின்றது. அத்துடன் மீளச் செலுத்தும் காலம் 25 வருடங்கள் ஆகும்.

**வட்டி 6%**
**மீளச் செலுத்தும் காலம் 25 வருடங்கள்**

மக்களை பலப்படுத்தி வளமான சமூகத்தை உருவாக்குவோம்

நிதி அமைச்சு

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட தரமான பேரீச்சம்பழங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

இப்புத்தாண்டுக்கு உங்களது அன்புக்குரியவர்களுக்கு வழங்கும் இனிப்புகளுடன் ஆரோக்கியமிக்க பேரீச்சம்பழங்களையும் சேர்த்து பகிர்ந்திடுங்கள்

Authorized Distributer for AL FOAH



விலை 195/=இல் இருந்து

Hotline 0777 977 467

DELIGHTING THE WORLD WITH DATES

எம்மிடம் உள்ள வகைகள்

- Safawi Dates
- Ajwa Premium
- Ajwa No.1
- Mabroon Dates
- Algerian Dates
- Maryam Dates
- Sagai Dates
- Medjool Dates
- Sukkari Dates
- Barari Algerian Dates
- Date Syrup
- Kimia Dates

இன்னும் பலவகையான ஈச்சம்பழங்கள்

நாடு பூராகவும் விநியோகஸ்தர்கள் தேவை

ஈச்சம்பழத்தை தினமும் உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தி உங்கள் வாழ்க்கையின் ஆரோக்கியத்தை அனுபவியுங்கள்.

ஏப்ரல் 02ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் (SLECC) நடைபெறவுள்ள கண்காட்சியில் அமைந்துள்ள 78, 89 கண்காட்சி கூடத்தில் பேரீச்சம்பழங்களை விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

DATE CROWN

**Best Food Marketing (Pvt) Ltd.**

No.32/A, Old Moor Street, Colombo - 12. | Tel : 011 2441277 | Fax: 011 2441979
E-mail: bestfoodmarketing@yahoo.com | datecrownsrilanka/
datecrownsl?utm_source=ig_profile_share&igshid=ea8lzodinlio

போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்! தரமான ஈச்சம் பழங்களை பார்த்து வாங்குங்கள்



மண்கும்பான்
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
மஹோற்சவம் -2019



இன்று (10.04.2019) புதன்கிழமை
பத்தாம் திருவிழா

மஞ்சத்திருவிழா

முதன் முறையாக மஞ்சத்திருவிழா இவ்வருடம் விசேட மேளதாள அலங்காரத்துடன் உலா வருவார் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்

f: mankumpan vellaipttady sri veerakathy vinayagar

அனுசரணை

| | | |
|---|---|---|
| நியூ நகுலா ஜீவல்லறி<br>இல. 45. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். 021 222 4101 | நியூ லலிதாஸ் ஜீவல்லறி<br>No. 30, 32. Kasthuriar Road, Jaffna. 021 222 5511 | நியூ நகுலா ஜீவல்லறி<br>இல. 109. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 221 9119 |



மண்கும்பான்
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
மஹோற்சவம் -2019



இன்று (10.04.2019) புதன்கிழமை
பத்தாம் திருவிழா

மஞ்சத்திருவிழா

முதன் முறையாக மஞ்சத்தில் இவ்வருடம் விசேட மேளதாள அலங்காரத்துடன் உலா வருவார் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்

f: mankumpan vellaipttady sri veerakathy vinayagar

நடராசா கஜந்தன் அனுசரணை

நியூ மைதி ஜுவலர்ஸ்



38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail newmaithily40@gmail.com
T.P: 021 221 7878/ 021 221 7877



உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111



WesternUnion WU

Sampath e remittance service

வெளிநாட்டிலிருந்து பெறும் பணத்திற்கு
பயணப் பை எங்களிடமிருந்து



உங்கள் அன்புக்குரியோர், வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பும் பணத்தை, சம்பத் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளும் உங்களுக்கு பெறுமதிமிக்க பயணப் பை இலவசம்.

நம்பிக்கையுடன், பாதுகாப்பு மிக்க சேவையை மிகத் துரிதமாகப் பெற்றுத் தரும் சம்பத் வங்கியின் வெஸ்டர்ன் யூனியன் ஊடாக,
2019 மார்ச் 22 முதல் ஜூன் 22 வரையான காலப்பகுதியில், குறைந்தபட்சம் இரண்டு முறை பணம் அனுப்பியிருந்தால், பெறுமதி வாய்ந்த இந்தப் பரிசு உங்களுக்கே.

சம்பத் வங்கி

0112 30 30 50 www.sampath.lk

Sampath Bank PLC - Company No. PQ 144

மானிப்பாயில்

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
சித்திரை புதுவருட வாழ்த்துக்கள்

HONDA

# றஞ்சிற் மோட்டோர்ஸ்
(RRSC MOTORS)

புதுவருடத்தை முன்னிட்டு யாழ். மக்களுக்காக HONDA
வழங்கும் மாபெரும் சலுகை

**கொண்டா மோட்டார் சைக்கிளினைக் கொள்வனவு செய்து**
**பண்டிகைக்கால சிறப்பு சலுகைகளைப் பெற்றிடுங்கள்.**



முற்பணத்தினை இலகுவாக செலுத்தும் வசதி. எம்மிடம் குறைந்த ஆவணங்களுடன் லீசிங் செய்யும் வசதி.



எம்மிடம் விசேட சலுகைகள்

அனைத்து வகையான
பழைய மோட்டார் சைக்கிள்களைக்
கொடுத்து புதிய கொண்டா
மோட்டார் சைக்கிளைப்
பெற்றிடும் வசதி

**முழுப் பணம் மூலமாக** Special OFFER
- சிறப்புப் பரிசில்
- காப்புறுதி (மூன்றாம் நபர்)
- தலைக்கவசம்
- யக்கெட்
- இலவச சேவைகள்
- இரண்டு வருட உத்தரவாதம்

**லீசிங் மூலமாக** Special OFFER
- சிறப்புப் பரிசில்
- பதிவுக்கட்டணம்
- காப்புறுதி • தலைக்கவசம்
- யக்கெட் • இலவச சேவைகள்
- இரண்டு வருட உத்தரவாதம்

நிபந்தனைக்குட்பட்டது

எமது சேவைகள்

மோட்டார் சைக்கிள் விற்பனை
உதிரிப்பாக விற்பனை
மெக்கானிக் அன் சேர்விஸ்

இச்சலுகை இம்மாதம் 9,10,11,
12,13,14ஆம் திகதிகளில்
மானிப்பாய் மருதடி
பிள்ளையார் கோவில்
அருகாமையில்
காலை 9.00 மணி
முதல் மாலை 8.00
மணி வரை

(C-6942)

rrscmanipay@gmail.com Honda Ranjit

றஞ்சிற் மோட்டோர்ஸ் (RRSC MOTORS)
இல.311A யாழ்.வீதி. மானிப்பாய்.
(சுதுமலைச் சந்தி அருகாமை)

T.P:021 492 7627 | 021 225 5228
077 310 7549 | 076 833 9898


## மரண அறிவித்தல்

### கிட்டிணன் இராசதுரை

(ஓய்வுபெற்ற பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் – PHFO)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் 13/2 ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் இராசதுரை 07.04.2019 ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (10.04.2019) புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று யாழ். பண்ணை பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

13/2 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் — தகவல்: குடும்பத்தினர்

உதயன் விளம்பரத்தொடர்புகளுக்கு advt@uthayan.com

## மரண அறிவித்தல்

### இராசா வாமதேவன்

(இராசா டீசல் இன்ஜினியர்ஸ் உரிமையாளர்,
தர்மகர்த்தா நல்லூர் பண்டாரக்குளம், மருதவளவு பிள்ளையார் கோயில்)



பிறப்பு 26.07.1943 — இறப்பு 08.04.2019

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மற்றும் மணல்தறை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட இராசா வாமதேவன் 08.04.2019 திங்கட்கிழமை பிள்ளையார் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், குகானந்தராணியின் அன்புக் கணவரும், சுஷாந்த், சுஷானா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவிதா, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கவின், அனிஷன், கவிஷன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், புஸ்பவதி, தர்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 9 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


28/3, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/9352)(11,17)

021 222 5755

## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது மதிப்பிற்குரிய ஆசான்
**எந்திரி றொசி ஹரிந்**
ஜப்பான் கராத்தே சம்மேளனத்தால் (J.K.F.)
சிகான் யோசோ ரக்கிமோட்டோ மூலம்
International Black Belt 4th DAN
வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
எமது குரு மேன்மேலும் தற்காப்பு துறையில்
வளர்ந்து பல வெற்றிகளைப் பெற வாழ்த்தி
வணங்குகின்றோம்.

மாணவர்கள் – Jaffna Karate School (J.K.S.)

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண் மகிழ 17.07.1957
கண் நெகிழ 11.03.2019

அமரர்
**புவிராஜசிங்கம் சர்வேஸ்வரராஜா**
(பாபு)

வானுலகில் வாழும் உமை எண்ணி
வாழ்ந்திடுவோம் வையகத்தில் நாமென்றும்
உங்கள் குரலோசை வானில் கலந்துவரும் காற்றின் தழுவலினால்
கண் கலங்கி நிற்கின்றோம் நாம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவை வேண்டிநிற்கின்றோம்

8/3, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

வளர்மதி
குடும்பத்தினர்.


## ANGEL INTERNATIONAL SCHOOL - MANIPAY
### தொழிற்துறைப் பயிற்சிநெறிகள் (TVC)

அரச அங்கீகார NVQ தரத்திலான சான்றிதழ்களும் பாடத்திட்டமும் பின்பற்றப்படுகின்றன.

| பயிற்சிநெறிகள் | முழுநேரம் | பகுதிநேரம் |
|---|---|---|
| 1) Diploma in practical Electronics (hand phone and computer repairing) | 6 months | 12 Months |
| 2) Diploma in Human Resource Management (மனிதவள முகாமைத்துவம்) Required Qualification: A/L with Work experience | 6 months | 12 Months |
| 3) Diploma in Secretarial Science (அலுவலகபொருளியல்) (Receptionist, Administrative Officer, Secretary, Telephone operators) Required Qualification: Minimum requirement 6 pass in O/L | 5 months | 10 Months |
| 4) Diploma in Business English (தொழில்துறைஆங்கிலம்) (special package can be given for group of working staff) Required Qualification: A/L with Work experience/Graduates | 6 months | 10Months |

**தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கற்றுக்கொடுக்கப்படும்.**
**விண்ணப்பமுடிவுதிகதி: 25/04/2019**

விண்ணப்பபடிவங்களை யாழ். மற்றும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு - 077 24 58 370
இணைப்பாளர் - தொழிற்துறைப் பயிற்சிநெறிகள்.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 31 . 12 . 1927



மறைவு 12 . 03 . 2019

### அமரர் புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு

கடந்த 12.03.2019 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி **அமரர் புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு** அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (11.04.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது துயரில் பங்கு கொண்டு சகல வழிகளினூடாகவும் அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

40/2, கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


(CS/24604)(11,17)

குடும்பத்தினர்.

# நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....

**05** வருடங்கள் நீர் சுத்திகரிப்பு துறையில் திறமை வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள்






- இலவச நீர்ப்பரிசோதனை
- இலவச ஆலோசனை
- 24 Hours விற்பனைக்குப் பிந்திய சேவை
- Life Time service warranty

உங்கள் வீடுகளில் / தொழிற்சாலைகளில்
வேறு நிறுவனங்களினால் பொருத்தப்பட்டிருக்கும்
நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் எம்மால் சரிபார்த்து தரப்படும்.

## Yarl Smart Water Solution (Pvt) Ltd

**Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410**

No.319,K.K.S Road,Jaffna. / Karadippokku Junction,A9 Road,Kilinochchi.

---

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**

**விசேட விலைக்கழிவு**

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

## சித்திரைப் புத்தாண்டு விசேட தள்ளுபடி





**புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்**

| | | |
|---|---|---|
| பட்டுச் சாறி | - ~~15000/=~~ | 7500/= |
| கொட்டன் சாறி | - ~~1800/=~~ | 1000/= |
| கொட்டன் Top | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் Top | - ~~1500/=~~ | 1000/= |
| பார்ட்டி புரொக் (பெரியது) | - ~~5000/=~~ | 3500/= |
| பார்ட்டி புரொக் (சிறியது) | - ~~3500/=~~ | 2500/= |
| கொட்டன் சல்வார் | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (பெரியது) | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (சிறியது) | - ~~3500/=~~ | 1000/= |

**இன்னும் பல புத்தம் புதிய டிசைன்களில்**

கொட்டன் சாறிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள்,பார்ட்டி புரொக்ஸ் , மொடன் சூட்ஸ், சேட், T-சேட், ரவுசர்

**இம் முறையும் சித்திரைப் புத்தாண்டை**
**இந்தியன் செலக்ஷனுடன் குதூகலமாகக் கொண்டாடுங்கள்**

**ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்**

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**

**காலம் : 23.03.2019 - 14.04.2019 வரை**

## மரண அறிவித்தல்கள்

தோற்றம் 02 . 01 . 1943



மறைவு 08 . 04 . 2019

# அமரர் சின்னத்தம்பி ஈஸ்வரலிங்கம்

*(முன்னைநாள் இ/போ/சபையின் வடபிராந்திய கணக்காய்வாளர்)*

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் ஐயனார் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஈஸ்வரலிங்கம் 08.04.2019 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகர் - அபிராமி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற புஸ்பகலாதேவியின் (ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர்) அன்புக் கணவரும், சுவேந்தினியின் (லண்டன்) அன்புத் தந்தையும் யோகறஞ்சனின் (லண்டன்) அன்பு மாமனாரும் ஆகாஷ், அக் ஷயா, அமீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் அற்புதலிங்கம் (ஓய்வுபெற்ற லிகிதர், யூனியன் கல்லூரி), அமிர்தலிங்கம்(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), நவரத்தினலிங்கம் (ஓய்வுபெற்ற பனை அபிவிருத்திச் சபையின் பணியாளர்), ஜெகதீஸ்வரி, ரதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2019) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஐயனார் வீதி,**
**சுன்னாகம்.**

(CS 24534) (14,17)

**தகவல்:**
**திரு.திருமதி யோகறஞ்சன்**

# விஸ்வலிங்கம் மகாலிங்கம்



பிறப்பு 29.05.1936 இறப்பு 07.04.2019

யாழ். கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கு, கோகுல வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் மகாலிங்கம் கடந்த (07.04.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மரகதலிங்கம் (சிவம்), மற்றும் கனகாம்பிகை, காலஞ்சென்றவர்களான் புவனேசமணி, தர்ம குலசிங்கம் மற்றும் தனபாலசிங்கம் (கனடா), இராஜேஸ்வரி, துளசி, மங்கையற்கரசி, பஞ்சலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமுள்ள சகோதரரும் பூகோலம், காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் பரமேஸ்வரி, அருணகிரிநாதர், சந்திரபாலசிங்கம், தனபாலசிங்கம், காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் சிவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனகலிங்கம் (மூர்த்தி - பிரான்ஸ்), கனேசலிங்கம் (கனேஸ் - பிரான்ஸ்), டெசியராணி (கனடா), ஜமுனராணி (டென்மார்க்), ராஜாதேசிங்க (கனடா), காலஞ்சென்ற செல்வராணி மற்றும் விஜியராணி (இலங்கை), சசிகுமார் (இலங்கை), கோகிலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமுள்ள அன்புத் தந்தையாரும் கல்பனா (பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்), பிறேமன் (கனடா), புறுனோ (டென்மார்க்), துர்க்கா (கனடா), சிவகாந்தன் (ஆசிரியர்), றெஜினா, பகீரதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும் கீர்த்தனா, சாரங்கி, தரனியா, கீர்த்தன், லக்ஷன், திலக்ஷா, ஜெசிக்கா, ஜெசிந்தா, தர்ஷன், யுனர்த்தன், நிக்குலாய், பிரவின், பிரஜின், அஸ்வின், அக்ஷின், அனகின், வேதவினோயிதன், அபராஜிதன், கம்சன், தக்சாயினி, லக்ஷினி, கரிகாலன், சாரா, லூகாஸ், சியாரா ஆகியோரின் அன்பு மிக்க பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2019) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கலைவாணி மக்கள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கனேசலிங்கம் (கனேஸ் - பிரான்ஸ்) 066 638 0857,**
**கனகலிங்கம் (மூர்த்தி - பிரான்ஸ்) 064 646 2768,**
**டெசியராணி (கனடா) 00151 44211257,**
**ராஜா (கனடா) 00151 468 45665,**
புறுனோ ஜமுனா 0045 644 23029 (டென்மார்க்),
**பகிரதன் கோகிலா 0049 7720 95326,**
**சிவகாந்தன் விஜியா 076 465 0354,**
**சசிகுமார் 077 173 4277**

(CS 24629/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டுத்திதி அழைப்பு



கடந்த 23.03.2019 வெள்ளிக்கிழமை சிவப்பேறு பெற்ற எமது குடும்பத் தலைவர்

## அமரர் இராசையா சண்முகலிங்கம்

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்தி பிரார்த்தனை இன்று (10.04.2019) புதன்கிழமை எமது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**அங்களப்பாய்,**
**இணுவில் கிழக்கு.**

(CS 24606)(14,17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

# சின்னத்துரை பத்மநாதன்



யாழ். அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பத்மநாதன் கடந்த (07.04.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வனதலட்சுமியின் அன்புக் கணவரும் கமலாதேவி (கொழும்பு), யோகநாதன் (கச்சாய்), சகுந்தலாதேவி (கனடா), சிவநாதன் (கனடா), லோகநாதன் (மின்சாரசபை, சுன்னாகம்), வைத்தியநாதன் (கனடா), நிர்மலாதேவி (கனடா), சர்வநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்கந்தராஜா, கமலாசினி, நித்தியானந்தன், விஜயகுமாரி, பவானி, ஜெகதாம்பிகை, வேதமூர்த்தி, சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான குணநாயகம், பத்மாவதி, இராசேந்திரம், நாகேந்திரம், கதிர்காமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கஜனி, சஜீவன், கஜன், ரதுசன், நவதர்சிக்கா, ராகவி, ஐங்கரன், ரக்ஷன், நிருபன், நர்மிதா, நிதர்சனா, கீசன், சயந்தன், ரஜிந்தன், கோகுலன், சாகித்தியன், தீபிகா, கார்த்திக், கிருஷான், யோதிகா, யோகிதன், நிவேதிகா, தானுகா, தானிகா, தயிகா ஆகியோரின் அன்புப் பேரனும் வர்சா, கவின், ஆரன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (13.04.2019) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர்.** (CS 24628/15/17) **தகவல்: குடும்பத்தினர்.**

# திருமதி சிவபாக்கியம் கந்தவனம்



தோற்றம் 24.06.1924 மறைவு 09.04.2019

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வேலணை, யாழ்ப்பாணம், வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் கந்தவனம் நேற்று (09.04.2019) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தவனம் அவர்களின் அன்பு மனைவியும் தம்பிராஜா(வேலணை),சந்திரசேகரம் (லக்ஷ்மி மில் - வவுனியா), மகாலிங்கம்(தலைவர்-வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை), சித்திரவடிவேல் (கனடா), காலஞ்சென்றவர்களான பூமகள், திருமகள் மற்றும் ஸ்ரீகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவக்கொழுந்து, சின்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரோஜினி தேவி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராஜலக்ஷ்மி, செல்வராணி, போசராஜா, தாரணி ஆகியோரின் மாமியும் சித்திராங்கனி - சுகிர்தன், ஸ்ரீவேணி - திலீபன், வாகீஷன், நளினி - தங்கராஜா, பிரியா - ரங்கன், நிலானி - பகீரதன், ஜெகா - கஜன், ஜெயப்பிரகாஷ் - சீத்தா, ரிஷாந்தன், நிவேதிகா, நிர்த்திகா, தரணி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கேஷிகா, மிர்த்தனா, லதுஷா, ஹரீஷ், கணேஷ், ஷோபனன், கௌஷன், கிஷான், அபிநயன் , ருக் ஷாந் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2019) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் வவுனியா தோணிக்கல் இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குட்செட் வீதி, தோணிக்கல், வவுனியா.

**சந்திரசேகரம் - 077 279 8990**
**மகாலிங்கம் - 077 773 2892**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## YAMAHA
Revs Your Heart

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

விசேட சலுகை எம்மிடம் Yamaha மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் அதிஸ்டம்

நல்லூர் பின் வீதியில் (பருத்தித்துறை வீதி) அமைந்துள்ள எமது காட்சிக் கூடத்தில் பழையதை கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றை கொண்டு செல்லுங்கள்.

8 - 12 ஆம் திகதி வரை மட்டுமே.



**மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி**

ரூபாய் 3.5 மில்லியனுக்கும் மேலான பெறுமதியுள்ள

Brand NEW

**WAGONR ஐப் பரிசாக வெல்லுங்கள்**



அத்துடன் பெறுமதியுள்ள வீட்டு எலக்ட்ரானிக் பொருள்களையும் வெல்லுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**DIGITAL ELECTROICE**
62/16, Stanley Road, Jaffna.
Tel: 021 222 4040 Mob : 077 662 3824 Email: nraveen1981@gmail.com

## விற்பனைக்கு

50 நாள்கள் நிரம்பிய அழகிய பொமனேரியன்நாய்குட்டிகள்விற்பனைக்கு.
-077 869 5005

## 3 நாள்கள் புத்தாண்டு சேல்ஸ்

யாழ் நகரத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட Serendib Luster Internatinal நிறுவனம் மூலம் உங்கள் வீட்டுக்கு தேவையான Electronice and Electricals உபகரணங்களை குறைவான விலையில் தரமான பொருள்களையும் புதுவருடதினதிற்காக இன்றுமுதல் 3 நாள்களுக்கு மட்டும் கழிவான விலையில் Sales விற்பனை மூலம் பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் இங்கு (Leasing) கட்டுக்காசுக்கு அவ் விலைக்கு வழங்கப்படும். குறைவான விலையில் தரமான பொருள்களையும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரேஸ்தாபனம்

Serendib Luster Internatinal
No.75,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
077 441 5309/ 077 288 3080

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள பார்சல் சேவை நிறுவனத்திற்கு ஆண் வேலையாள்கள் தேவை. (உணவு, தங்குமிடம் இலவசம்)

* Bill Clerk
* Manager
* உதவியாள்கள்.

தொடர்பு - 077386 6250

## தவறிவிட்டது

சாவகச்சேரிக்கும்கொடிகாமத்திற்கும்இடையில் வாகன பதிவுச்சான்றிதழ் (புத்தகம்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு - 077 541 8864

## வேலைக்கு ஆள்கள் தேவை

Ultratech Cement கம்பனியில் விற்பனை பிரதிநிதிகள் தேவை. ஆண்கள் மட்டும்.
வயதெல்லை 25 - 40
சாரதி அனுமதிப்பத்திரம் சொந்த மோட்டார் சைக்கிள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(CS 24620(04,17)

விளம்பர இல : 1006, மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பெயர்மாற்றம்

வைரவ கோவிலடி 2 ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறையை வசிப்பிடமாக கொண்ட மகேந்திரன்வன்னீஸ்வரன்ஆகியநான்இன்றுமுதல் எனது பெயரை மகேந்திரன் **"பிரசாந்"** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**மகேந்திரன் - பிரசாந்**

## நல்லூர் பிரதேச சபை
## கொக்குவில்
## 2019 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடையினை 2019ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 22.04.2019 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 23.04.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 23.04.2019 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை.

**மீள் கேள்வி அட்டவணை**

| இல | இறைச்சிக்கடை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | | நல்லூர் உப அலுவலகம் | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக்கடை இல 01 | 500.00 | 5,000.00 | 100,920.00 |

கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

திரு தா.தியாகமூர்த்தி
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.
10.04.2019

## உலகின் தலைசிறந்த பிரித்தானிய பல்கலைக்கழகங்களின் பட்டக்கல்விகள் யாழ்மண்ணில்... IIS இல்....

UGC APPROVED



Leeds Trinity University

**BA (Hons)**
Business & Management
Business & Marketing

**MBA**
Master of Business Administration

IIS

GET YOUR CAREER ON TRACK...

UNIVERSITY of GREENWICH

**BSc (Hons)**
Computing
Computer Systems
& Networking





*Admissions open for April Intake...* **Call us on : 021 222 8060**

IIS
SUCCESS THROUGH KNOWLEDGE

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road , Jaffna
info@iis.edu.lk | www.iis.edu.lk

PIBT

Hotline:
071 777 4666
021 4900 900

## Why should you select IIS ?

- IIS set high standards for teaching quality.
- The lecture panel consist of eminent academic and industry experts.
- Bank loan facilities and easy payment schemes.
- Industrial placement at leading companies.

## மரண அறிவித்தல்

மண்ணுலகில்
02 . 08 . 1949



விண்ணுலகில்
09 . 04 . 2019

### திருமதி சின்னப்பன் பேளிலன்செலட்

கிருலப்பனை கொழும்பைப் பிறப்பிடமாகவும், நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறை மற்றும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பன் பேளிலன்செலட் நேற்று (09.04.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - மருகருதம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பச்சைமுத்து சின்னப்பனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மேரிகிரேஸ், அல்பிறட், திரேசா மற்றும் இம்மனுவல்பிள்ளை, மேசிமெற்றில்டா, பஸ்ரியாம்பிள்ளை, ஜோர்ச், சுபோதினி ஆகியோரின் சகோதரியும், டினேஸ்குமார், பிரியதர்சினி (லண்டன்), மரியகொறற்றி (ஆஷா - புத்தளம் ) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வனஜா (ரதி), பிரதீபன் (தீபன்), ஜோசப்லீன் ஆகியோரின் மாமியாரும், தர்சிகா, தரணிகன், செமீரா, ஏஞ்சலின் சோபியா, றொனால்ட் ஆகாஸ், றொபேட் அகிலேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (10.04.2019) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புனித ஆசிர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.132, கச்சேரி நல்லூர் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பிள்ளைகள்.**

**டினேஸ் - 077 271 9812, ஆஷா - 077 774 2359,**
**பிரியா - 0044 744 863 9051**

## மரண அறிவித்தல்



### சிதம்பரப்பிள்ளை விஜயரட்ணம்

**(முன்னாள் இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி)**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்.மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை விஜயரட்ணம் 05.04.2019 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், இராசையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், லீலாதேவியின் அன்புக் கணவரும், சேந்தன் (பிரான்ஸ்), தனுசன், தனுசிகா, தர்ஜிகா (பல் மருத்துவர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அருந்தவச்செல்வி மற்றும் முருகரத்தினம் (சுவிஸ்), வரதலிங்கம் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு சகோதரரும், பரமேஸ்வரனின் (பிரித்தானியா) அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் துதி அந்தியகால சேவை, இல.56, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வைக்கப்பட்டு இன்று (10.04.2019) புதன் கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (11:04.2019) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**19/1, மூத்ததம்பி வீதி,**
**மானிப்பாய், யாழ்ப்பாணம்.** (CS/24619)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**வி.தர்ஜிகா - 077 018 4369**

## மரண அறிவித்தல்

# விநாயகர் தர்மலிங்கம்

பலாலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் இராசவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகர் தர்மலிங்கம் 08.04.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகர் லக்ஷ்மி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராசா முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகேஷ்வரியின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரன் (கொலண்ட்), செல்வராஜா (லண்டன்), இரங்கநாதன் (கனடா), ஸ்ரீகரன் (லண்டன்), மாலினி (ஜேர்மனி), சுதாகரன் (கொலண்ட்), பிரேமச்சந்திரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராணி (கொலண்ட்), பவானி(லண்டன்), சுமதி (கனடா), விக்னேஸ்வரி (லண்டன்), இராதாகிருஸ்ணன் (ஜேர்மனி), சுரேந்தினி (கொலண்ட்), கிருஷ்ணகுமாரி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அசோக்ராஜ், நிவேகா, டிவாகர், ரிசீகா, சிந்துஜன், ஆகாஷ், ரணுஜன், துர்க்காயினி, தட்ஷாயினி, பிரவீனா, பிரவீனன், பிரஜித், சாருகன், அபிராமி, காயத்திரி, பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.04.2019 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"ஸ்ரீரங்கம்"**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**தகவல்:மனைவி,**
**பிள்ளைகள்.**



**077 605 7621/ 076 645 4639**

# இரு சமூகத்தினரும் ஒன்றிணைந்த புத்தாண்டாக இம்முறை அமையும்

## முன்னாள் அரச தலைவர் சந்திரிகா யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

இரண்டு சமூகத்தினரும் இணைந்த புத்தாண்டாக இந்த ஆண்டுப் புத்தாண்டு அமையும் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.



தேசிய நல்லிணக்க புத்தாண்டு பெருவிழா யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், தேசிய ஒருமை பாட்டுக்கும் நல்லிணத்துக்குமான அலுவலகம், அரச கரும மொழிகள் அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் தங்கள் புத்தாண்டு கொண்டாட்டத்தை தனித் தனியாக கொண்டாடினார்கள். ஆனால் இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் இவ்வாறு ஒரு நிகழ்வின் மூலம் இரண்டு இன மக்களும் இணைந்து புத்தாண்டு கொண்டாட்டங்களைச் செய்கிறார்கள்.

அனைத்து மத இனத்தவர்களும் இங்கு வந்துள்ளனர்.ஒரு இனத்தின் கலாசாரத்தை ஏனைய இன மாணவர்கள், மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். இதுவரை சண்டை இட்டது போதும். இனிமேல் சமாதானமாக வாழ வேண்டும்.

இங்கு நடைபெறும் நிகழ்வு ஒரு சமாதானத்துக்கானது. இங்கு வந்துள்ள ஆசிரியர்கள் இந்த சமாதானச் செய்தியை மாணவர்களுக்குச் சொல்ல வேண்டும். நாம் அனைவரும் ஒரே இனம்தான் .இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகள் - என்றார்.

தமிழ்-சிங்கள பாரம்பரிய நடனங்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. தமிழ் - சிங்கள புத்தாண்டு கலாசாரம், பழக்க வழக்கத்தை பிரதி பலிக்கும்வகையில்மைதானத்தில் ஓலைமண் வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. மாட்டு வண்டில், துலா போன்ற பல்வேறு பாரம்பரிய அம்சங்களை உள்ளடங்கிய வீடுகளாக அவை அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை விருந்தினர்கள் பார்வையிட்டனர்.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆசிரியர் கலாசாலை மாணவர்கள், கலைஞர்கள், அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(எ-7,106)

# எவர் கோரிக்கை முன்வைத்தாலும் சட்டரீதியாகவே செயற்படமுடியும்

*வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபை விளக்கம்*

யாழ்ப்பாணம், ஏப். 10

வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபை ஒவ்வொருவரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தான் தோன்றித்தனமாகச் செயற்பட முடியாத முற்று முழுதான சட்டபூர்வமான அமைப்பு. இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள போக்குவரத்து அதிகார சபையின் தன்னிச்சையான செயற்பாட்டால், வடக்கு மாகாணத்திலுள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் குற்றஞ்சாட்டியிருந்தது. உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின், பேராட்டம் நடத்துவோம் என்றும் சங்கம் தெரிவித்திருந்தது.

இது பற்றிய செய்தி உதயனில் கடந்த 3ஆம் திகதி வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் அதிகார சபை அனுப்பிய விளக்கத்தி லேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, வடக்கு மாகாண சபையால் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 திகதி அங்கீகரிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச் சட்டத்துக்கமைய உருவாக்கப்பட்ட சட்ட பூர்வமான அமைப்பு.

இந்த நியதிச் சட்டம் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையை ஆரம்பிப்பதற்கும், பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு நியதிச் சட்டம்.

இதன் குறிக்கோள்களைச் சரியாகவும், நேர்மையாகவும் பக்கச் சார்பற்ற முறையிலும் பயணிகளுக்கு வசதியானதும் பாதுகாப்பானதும் தரமுள்ளவையுமான சேவைகளை உறுதிப்படுத்தி வடக்கு மாகாணத்தில் எல்லாப் பாகங்களுக்கும் நீடித்து வீதிப் பயணிகளுக்குத் தரமான சேவையை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஒரு சட்டபூர்வமான அதிகாரசபை.

இந்த அதிகாரசபை ஒவ்வொருவரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தான் தோன்றித்தனமாகச் செயற்பட முடியாத முற்று முழுதான சட்டபூர்வமான அமைப்பு. ஒவ்வொருவரும் தங்கள் கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

உதயனில் கடந்த 3அம் திகதி 12 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட செய்தி உண்மைக்குப் புறம்பான நிறைவேற்ற முடியாத கோரிக்கை. சட்டத்துக்கு முரணாக ஏதாவது தவறுகள் இடம்பெற்றிருந்தால் ஆதார பூர்வமாக நிரூபிக்கு மிடத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்.

வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நியாயமான, பக்கசார்பற்ற செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். வீதிப்பயணிகளுக்கு வசதியானவையும் தரமுள்ளவையுமான வீதிப் போக்குவரத்துச் சேவைகளை உறுதிப்படுத்தி சௌகரியமானதும், மகிழ்ச்சிகரமானதுமான பயணச் சூழ் நிலையை ஏற்படுத்திப் போக்குவரத்துச் சேவைகளை வடக்கு மாகாணத்தில் எல்லாப் பகுதிகளுக்கும் நீடிக்க வேண்டும்.

அந்தச் சட்ட ரீதியான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கித் தனியார் வீதிப் பயணிகள் சேவையை தரமுயர்த்தி சிறந்த சேவையாக மாற்றுவதற்கு உதவுமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன் என்று வடக்கு மாகாணப் போக்குவரத்து அதிகார சபையின் பொதுமுகாமையாளர் வ.பத்மநாதன் அனுப்பிய விளக்கக் குறிப்பில் உள்ளது.

(த)

# எல்லை தாண்டினர் என தமிழக மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப்.10

எல்லைதாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 4 பேர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் ஒரு படகும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் இராமேஸ்வரம் மற்றும் தங்கச்சிமடத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் நெடுந்தீவுக்கு அருகே நேற்று அதிகாலை 2 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்று மாலை ஊர்காவற்றுறை நீதிவானின் இல்லத்தில் முற்படுத்தப்பட்டனர். எதிர்வரும் 16 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தவிட்டார்.

(எ-37,26)

# எங்களது பெயரால் வெளியான செய்தியில் உண்மையில்லை

*வட மாகாண மருத்துவ மன்றம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 10

வடக்கு மாகாண மருத்துவ மன்றம் என்ற பெயரில் வெளியான செய்திக்கும் தமது மன்றத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை என்று வடக்கு மாகாண மருத்துவ மன்றம் தன்னிலை விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உதயனில் கடந்த 6ஆம் திகதி வெளியான செய்தியில், தமது மன்றம் அனுப்பியதாகக் குறிப்பிட்டு 'இருதய சத்திரசிகிச்சை விடுதியை உடனடியாக இயக்குமாறு பணிப்பு நோயாளரை நிபுணர்கள் பணத்துக்காக ஏய்த்த அவலமும் போட்டுடைப்பு' என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியானது. தமது மன்றத்தின் பெயரால் வெளியான இந்தச் செய்தி எங்களால் தரப்படாத எமக்குத் தொடர்பில்லாத எமக்குச் சங்கடத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் உண்மையல்லாத பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இது எமது உறுப்பினர்கள் மத்தியில் குழப்பத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எமது மன்றத்துக்கும் குறித்த செய்திக்கும் தொடர்பில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

# மாடியிலிருந்து விழுந்து இளைஞர் சாவு

கொழும்பு, ஏப்.10

கொழும்பு, காலிமுகத் திடலில் அமைக்கப்பட்டுவரும் உயர் மாடிக் கட்டடம் ஒன்றில் இருந்து தவறி விழுந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்தக் கட்டடத்தின் 18ஆவது மாடியில் பணியாற்றிக் கொண்டிருந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே விழுந்து உயிரிழந்துள்ளார். இவர் மீகஹாதென்ன, ஊறலவைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் உடல் உடற்கூற்றுச் சோதனைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் புறக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-222)

# கஞ்சா வைத்திருந்தாரென ஒருவர் கைது

வடமராட்சி,ஏப். 10

2 கிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பனிப்புலம் பகுதியில் வைத்து சந்தேகநபரை நேற்று காங்கேசந்துறை சிறப்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைதுசெய்து இளவாலைப் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர்.

வீதியால் ஈருருளியில் சென்ற மூளாயைச் சேர்ந்த 52 வயதுடைய நபரை சந்தேகத்தின்பேரில் சோதனை செய்த பொழுது உடமையில் 2 கிராம் கஞ்சா இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ஜ-26)





## சுதேசிய திருநாள் ஊர்திப் பவனி

யாழ்ப்பாணம்.ஏப் 10

யாழ்ப்பாணம் அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அரியாலையூரின் கலை கலாசாரத்தை எடுத்தியம்பும் ஊர்திப்பவனி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமான பவனி ஏ9 வீதி, மருத்துவமனை வீதி, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதியூடாக பழம் சந்தி உள்ளூர் வீதிகள் ஊடக அரியாலையைச் சென்றடைந்தது. (ஐ-23)

# மாற்று இடம் வழங்குமாறு வியாபாரிகள் போராட்டம்

## மாநகர சபை முன்பாக ஆரம்பித்தனர்

*யாழ்ப்பாணம், ஏப். 10*

**யா**ழ்ப்பாண மாநகர முதன்மைப் பேருந்து நிலையத்தைச் சூழ வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வியாபாரிகள், தமக்கு மாற்று இடம் வழங்கவேண்டும் என்று வலியுறுத்தி அமைதிவழிப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

யாழ்ப்பாண மாநகர சபை முன்றலில் அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். யாழ்ப்பாணம் மாநகர மத்திய பேருந்து நிலையம் நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நவீன முறையில் மேம்படுத்தப்படவுள்ளது.

பணிகளை ஆரம்பிக்க உள்ள நிலையில் பேருந்து நிலையத்தைச் சூழ பழக்கடைகள் உள்ளிட்ட வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் 63 வியாபாரிகளை எதிர்வரும் 30ஆம் திகதியுடன் அந்தப் பகுதியிலிருந்து வெளியேறுமாறு யாழ்ப்பாணம் மாநகர சபை அறிவித்திருந்தது.

இந்த நிலையில் 63 வியாபாரிகளின் வாழ்வாதாரத்தைக் கவனத்தில் எடுத்து மாற்று இடத்தை ஒதுக்கித் தருமாறு கோரி வியாபாரிகள் அமைதிவழிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தமது கோரிக்கையை யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் நிறைவேற்றும் வரை தமது போராட்டம் தொடரும் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். (த-106)

## இணக்க சபை அமர்வு

சாவகச்சேரி, ஏப். 10

சாவகச்சேரிப் பிரதேச இணக்க சபை அமர்வு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமென தவிசாளர் வை. இராசரத்தினம் அறிவித்துள்ளார்.

14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவிருந்த அமர்வு அன்றைய தினம் சித்திரைப் புத்தாண்டு என்பதால் முதல்நாள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமை போல எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அமர்வு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என்றும் அறிவித்துள்ளார். (ஐ-9)

✦ ✦ ✦ ✦

பூநகரி, ஏப். 10

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சித்திரைப் புத்தாண்டு தினம் என்பதால் அன்றைய தினம் பூநகரி இணக்க சபையின் அமர்வு இடம் பெறாது என்று சபைத் தவிசாளர் ஐ.யசோதரன் அறிவித்துள்ளார்.

வழமைபோல எதிர்வரும் 21 ஆம் திகதி அமர்வுகள் பூநகரி மத்திய கல்லூரியில் இடம்பெறுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (ஐ-9)

# யாழ்.பேருந்து நிலையக் கடைகளை வர்த்தகர்கள் அகற்றத்தான் வேண்டும்

## மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

தற்பொழுது, மாநகர கட்டளைச் சட்டப்படி உடனடியாக குறித்த வர்த்தகர்களை அப்புறப்படுத்துமாறும், இனி தாம் வரி அறவிடமாட்டோம் என்றும் போக்குவரத்துச் சபையினர் தெரிவித்துவிட்டனர். என்று தெரிவித்துள்ள யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனோல்ட், கடைகள் அனைத்தும் கட்டாயம் அகற்றப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தைச் சுற்றியும் அண்மித்தும் இருக்கக்கூடிய அங்காடி வர்த்தக கடை தொடர்பில் பல்வேறு திரிவுபடுத்தப்பட்ட செய்திகள் வெளிவந்துகொண்டிருந்தன என்று தெரிவித்த முதல்வர், அதைத் தெளிவுபடுத்தும் வகையில் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தைச் சுற்றியும் அண்மித்தும் சுமார் 64 அங்காடி வர்த்தகக் கடைகள் காணப்படுகின்றன. இந்தக் கடைகள் தொடர்பாக மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் ஒன்றிலே பேசப்பட்டபோது 'சட்ட விரோதமான கடைகளை அகற்றுவதற்கு மாநகர கட்டளைச் சட்டம் அனுமதிக்கிறது. மாநகரப் பகுதியிலே மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை அகற்ற மாநகரசபைக்கு உரித்து உண்டு. சபை அங்கீகாரத்தைப் பெற்று அவ்வாறான கடைகளை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டோம்'. பேருந்து நிலையம் மக்களுக்கு அனுகூலத்தை ஏற்படுத்தக்கூடியதாகக் காணப்பட வேண்டும். தற்பொழுது உள்ள கடைப்பகுதிகளில் இரவில் குறித்த கடைகளுக்குச் சம்மந்தப்படாதோர் அசாதாரண நிலமைகளை ஏற்படுத்துகின்றனர் என்று சபையில் பேசியபோது அந்தக் கடைகள் சட்டவிரோதமான கடைகளாக இருந்தால் அதனை அகற்ற வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் அவர்களுடைய குடும்ப நலன் கருதியும், அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் கருதியும் அவர்களின் கல்வி நலன் கருதியும் அவர்களுக்குக் கால அவகாசம் வழங்கியிருந்தோம். அவர்கள் வழங்கிய பதில், 'அது எங்களுடைய ஆளுகைக்கு உட்படாமல் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளுமைக்கு உட்பட்டிருந்த காரணத்தால், அவர்களுக்குக் கடை உரிமையாளர்கள் மாதாந்த வரி செலுத்தி வந்த காரணத்தால், அவர்கள் தங்களைப் பாதுகாப்பார்கள்' என்ற துணிச்சலின் படிசபையின் கட்டளைகளை ஏற்கவில்லை.

போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அண்மையிலே யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, 'யாழ்ப்பாணப் பேருந்து நிலையம் அமையப் பெற்றிருப்பது மாநகர சபையின் காணி. முன்னர் அரச பேருந்து சேவைக்காக வழங்கப்பட்டது. அதற்குரிய ஆவணங்கள் எம்மிடமில்லை. போக்குவரத்துச் சபையிடம் குறித்த காணி இருப்பதில் முரண்பாடுகளில்லை. பேருந்து நிலையத்தைச் சுற்றிவர உள்ள கடைகள் சட்ட்விரோதமானவை. இலங்கையிலே எந்தப் போக்குவரத்துச் சபைக்கும் அதனைச் சுற்றிவர உள்ள கடைகள் வரிசெலுத்துவதில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டும் இது விதிவிலக்கானது. இந்தக் கடைகள் சட்டவிரோதமானவை. அவற்றை அகற்ற அனுமதிவழங்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அந்தக் கடைகளுக்கு யார் அனுமதி வழங்கியது என்று அமைச்சர் கேட்டிருந்தார்.

மாநகர சபை வழங்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்தினேன். ஆரம்பத்தில் 10 - 14 வரையான கச்சான் மற்றும் சிற்றூண்டி விற்பனை கடைகள் நடத்தப்பட்டு வந்தன. 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 64 கடைகள் நடத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டிருக் கின்றன.

பெரும் அபிவிருத்தி மற்றும் மேல் மாகாண அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள பேரூந்து நிலைய அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் விளக்கினேன். அதற்கு அமைச்சர், தற்போதைய பேருந்து நிலையத்தைத் தற்காலிகமாக தொடருந்து நிலையத்தின் வடக்குப் பக்கமாகவுள்ள இடத்தில் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதாக குறிப்பிட்டிருந்தார். அங்கிருந்த வியாபாரிகளின் நிலையைக் கருத்திற்கொண்டு நான்தான் வியாபாரிகளினதும் கடைகளைத் தற்காலிகமாக தொடருந்து நிலையத்தின் வடக்குப் பக்கத்தில் செயற்படுத்த அனுமதி வழங்க முடியுமா? என்ற விண்ணப்பத்தை முன்மொழிந்தேன். அதற்கு அமைச்சர் உடனடியாகப் பேருந்து சேவைக்கான அனுமதியை மாத்திரமே வழங்க முடியும் என்றும் அடுத்த தனது யாழ்ப்பாணப் பயணத்தில் அது தொடர்பில் பதில்தருவதாகக் கூறினார்.

வியாபாரிகளின் தற்காலிக கடைகளுக்கான அனுமதி தொடர்பில் வினவிய போது, "குறித்த அனுமதி தொடர்பில் போக்குவரத்து சபையால் அதன் விழுமியங்க ளுக்குட்பட்டு அனுமதி வழங்க முடியாது" என்று குறிப்பிட்டார்.

வியாபாரிகள் கடன்பெற்று வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதனால் பாதுகாப்புத் தர வேண்டும் என்று கூறினர்.

அதற்கு நான் "நீங்கள் சட்டவிரோதமாகக் கடைகளை அமைத்திருக்கின்றீர்கள். இவற்றை முதலில் அப்புறப்படுத்தி உங்களுக்கேற்ற இடத்தில் தொழில் முயற்சிகளை ஆரம்பியுங்கள் என்று கடந்த வாரம் அவர்களைச் சந்தித்து விளக்கியிருந்தேன். எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கடைகளை அகற்ற வேண்டிய விடயம் தொடர்பிலும் குறிப்பிட்டிருந்தேன் - என்றார். (த-105)

## உந்துருளி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஏப். 10

உந்துருளிகள் இரண்டு மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து மீசாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மீசாலை கிழக்கு மற்றும் பாலாவி வடக்கைச் சேர்ந்தவர்களே காயமடைந்தனர். (ஐ-9)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.10

தென்மராட்சிப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து "தென்மராட்சியின் கலை இலக்கிய பாரம்பரியங்களை முன்நிறுத்துதல்" எனும் தலைப்பில் மூன்று நாள் ஆய்வரங்கை நடத்தவுள்ளது.

இந்த ஆய்வரங்கம் மே மாதம் 24 ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலர் ஜி. வினோஜிதா அறிவித்துள்ளார். (ஐ)

# சாவகச்சேரியில் நாளை முதல் மாட்டிறைச்சிக் கடை இயங்கவுள்ளது

சாவகச்சேரி, ஏப். 10

சாவகச்சேரி நகரசபையின் மாட்டிறைச்சிக் கடை நாளை வியாழக்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளதாக நகரசபையினர் அறிவித்துள்ளனர்.

மாட்டிறைச்சிக் கடை குத்தகைக்கு விடுவது தொடர்பாக கேள்வித் தொகை குறைத்து நேற்று பகிரங்க ஏலத்தில் விடப்பட்டது. இதன் போது ஒருவர் இந்த வருடத்துக்கு குத்தகைக்கு எடுத்துள்ளார். இவர் நாளை மாட்டிறைச்சிக் கடையை ஆரம்பிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையால் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி போன்ற கடைகள் குத்தகைக்கு விடுவது தொடர்பாக கேள்வி அறிவித்தல் கோரியபோது எவரும் விண்ணப்பிக்கவில்லை.

இது தொடர்பாக சபை நிர்வாகத்தினர் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருடன் தொடர்பு கொண்டதையடுத்து கேள்வித் தொகைகளைக் குறைத்து ஏலத்தில் விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதனையடுத்து கடந்த மாதம் ஏலம் நடத்தப்பட்டது. அப்போது இரு ஆட்டிறைச்சிக் கடைகளும் கோழி இறைச்சிக் கடையும் குத்தகைக்கு ஏலத்தில் வழங்கப்பட்டன.

மாட்டிறைச்சி கடையினை குத்தகைக்கு எடுக்க எவரும் வராதநிலையில் ஏனைய ஏலம் முடிவடைந்த பின்னர் அங்கு வந்த ஒருவர் தனக்கு மாட்டிறைச்சிக் கடையினை வழங்குமாறு கோரியுள்ளார். ஏலம் முடிந்துவிட்டது எனக் கூறி மறுதிகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையிலேயே நேற்று மாட்டிறைச்சிக் கடை குத்தகைக்கு விடுவது தொடர்பாக ஏலம் கூறியபோது கடையை நடத்த ஒருவர் முன்வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள்

ஊர்காவற்றுறை.ஏப். 10

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை கியூமெடிக்கா முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் மாலை சிறப்பாக இடம்பெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கரம்பொன் ஜே/51 கிராம அலுவலகர் டினேஸ், சிறப்பு விருந்தினராக தேவ வார்த்தை மிசனரி சபையின் தலைமை போதகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-154)

## பொங்கல் நிகழ்வுகள்





யாழ்ப்பாணம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் நிகழ்வுகள் நேற்று சிறப்பாக இடம்பெற்றன. இதில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டு பொங்கல் பொங்கி வழிபாட்டில் ஈடுபட்டனர். (ஐ)

## பொங்கல் நிகழ்வு

வடமராட்சி.ஏப். 10

யாழ்ப்பாணம் வடமராட்சி தம்பசிட்டி வாணர்க்குடியிருப்பு சொக்கன்கலட்டி சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. மதியம் 12 மணியளவில் சிறப்பான பொங்கலும், வேள்விப் பூசைகளும் நடை பெறவுள்ளன. (ஐ-124)

## பெந்தெகொஸ்தே சபையின் கன்வென்சன் ஆரம்பம்

இலங்கைபெந்தெகொஸ்தே சபையின் வருடாந்த கன்வென்சன் ஆரம்பமாகின்றது.

நாளை வியாழக்கிழமை தொடக்கம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை அரியாலை இளையதம்பி வீதியிலுள்ள இலங்கைபெந்தெகொஸ்தே சபையில் சுவிஷேசக் கூட்டங்கள் நடைபெற உள்ளன. இந்தக் கூட்டத்துக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் ம்க்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.





## அடிக்கல் நடும் நிகழ்வு

கொடிகாமம், ஏப். 10

யாழ்ப்பாணம் கைதடி கிழக்கு செல்வா சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நிலைய வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

கிராமிய அபிவிருத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. (ஐ-159)

## நிர்வாக அலுவலராக கடமையேற்பு

குருநகர், ஏப். 10

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையின் புதிய நிர்வாக அலுவலராக திருமதி கஜேந்தினி மதனகுமார் கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். முகாமைத்துவ உதவியாளர் அதி சிறப்புத் தரத்தில் சித்தியடைந்த இவர் இதற்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலகம், மானிப்பாய் பிரதேச சபை ஆகியவற்றில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-51)



## தேசிய டிப்ளோமா பயிற்சி நிறைவு

வவுனியா.ஏப்.10

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்களுக்கான நிறைவு நாள் நிகழ்வும், மதிப்பளிப்பும் கல்லூரியின் பீடாதிபதி கதிரேசன் சுவர்ணராஜா தலைமையில் நேற்றுமுன்தினம் கல்லூரி முதன்மை மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் ஓய்வுபெற்ற பீடாதிபதி கு. சிதம்பரநாதன் மற்றும் யாழ்ப்பாணம் தேசியகல்வியியல் கல்லூரியின் ஓய்வுபெற்ற பீடாதிபதி ச. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

ஆரம்பப்பிரிவு, விவசாயப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு, கணிதப்பிரிவு, வர்த்தகப்பிரிவு, உணவுத் தொழில் நுட்பப் பிரிவு, உடற்கல்வி பிரிவு, இந்து சமயப்பிரிவு மற்றும் கிறிஸ்தவப் பிரிவு ஆகிய துறைகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்த 257 மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உபபீடாதிபதிகளான தி.ஜெயகாண்டீபன், பொ.சத்தியநாதன், இணைப்பாளர்களான கி. யோகராஜா, எஸ்.சத்தியசீலன் மூத்த விரிவுரையாளர்களான ந.பார்த்தீபன், எஸ். பவானந்தன், கீழ்நிலை ஆசிரிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டிருந்தனர். (க-110)





## ப.நோ.கூ. சங்கக் கட்டடத் திறப்பு நிகழ்வு

கொடிகாமம், ஏப். 10

தென்மராட்சிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கெற்பேலிக் கிளை கட்டடத் திறப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கிளைத் தலைவர் ப.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக இ.அ.ஆனந்தராசா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அலுவலகர் சி.சியந்தன், தென்மராட்சிக் கிழக்கு ப.நோ.கூ.சங்க முகாமையாளர் தேவகுமார், மதிப்புறு விருந்தினர்களாக சாவ கச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன் மற்றும் உறுப்பினர் க.குமாரு ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-159)

# வடக்கு ஆளுநர் செயலகத்துக்கு இயக்கச்சியிலிருந்து குடிதண்ணீர்

கிளிநொச்சி,ஏப். 10

**கிளிநொச்சி இயக்கச்சியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள குடிதண்ணீர் கிணற்றிலிருந்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலக தேவைகளுக்கு தண்ணீர் எடுத்துச்செல்லப்படுகிறது என பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.**

பொதுமக்கள் மேலும் தெரிவித்ததாவது:

பளை இயக்கச்சி பகுதியில் அமைந்துள்ள குடிநீர் கிணறு தற்போதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. குறித்த கிணற்று நீர் பளை பிரதேசத்தில் அமைந்துள்ள சுத்தமான குடிநீரை கொண்ட ஒரேயொரு கிணறு என்றும் கிட்டத்தட்ட போத்தலில் அடைக்கப்பட்ட நீர்போன்று இந்தக் கிணற்று நீர் காணப்படுகிறது என்றும் பொது மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

வறட்சியான காலங்களில் பளை பிரதேசத்தில் பொது மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு இந்தக் கிணறே பயன்படுத்தப் பட்டு வந்தது. ஆனால் 2009க்கு பின்னர் கிணறு இராணுவத்தினரின் முழுமையான கட்டுப்பாட்டில் காணப்படுகிறது. சிறியளவில் நீரை பெற்றுக்கொள்வதற்கு இராணுவத்தினர் இயக்கச்சி ஏ 9 வீதியில் குழாய் வசதியை ஏற்படுத்தியுள்ளனர். இந்தநிலையில் பிரதேச சபையோ அல்லது பிரதேச செயலகமோ நீர் தாங்கி மூலம் நீரைப் பெற்று பொது மக்களுக்கு வழங்க முடியாதுள்ளது.

ஆனால் குறித்த கிணற்றில் இருந்து யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கும் அலுவலக பணியாளர்களின் தேவைகளுக்கும் குடிநீர் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கும் இந்த கிணற்றிலிருந்து நீர் எடுத்துச் செல்லப்படுகிறது என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் பளை பிரதேசத்தில் சில கிராமங்களில் குடிநீரை பெற்றுக்கொள்வதில் மக்கள் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர் என பொது மக்கள்தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

பொது மக்களின் இந்தக் கருத்து தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் இளங்கோவனைத் தொடர்புகொண்டு வினவிய போது, வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தின் பயன்பாட்டுக்கு இங்குள்ள நீர் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. எனவேதான் இயக்கச்சியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கிணற்றில் இருந்து வாரம் ஒரு தடவை நீர்த்தாங்கி மூலம் நீரை பெற்று 'வருகின்றோம்.

இந்த நீர் ஆளுநர் அலுவலகம் மற்றும் இங்குள்ள பணியாளர்களின் தேவைகள், அலுவலகத்துக்கு வருகின்ற பொது மக்களின் தேவைகளுக்கு பயன்படுகிறது - என்றார். (க-214)

# கசிப்பு உற்பத்தி நிலையங்கள் அழிப்பு

கிளிநொச்சி, ஏப் .10

பெரியகுளம் மற்றும் கல்லாறு பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் பகுதியில், கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்ட பொலிஸார் ஒருவரை கைது செய்ததுடன், அவரிடம் இருந்து 466 போத்தல் கோடா, 44 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களையும் மீட்டதுடன் நிலையத்தையும் அழித்துள்ளனர்.

அதே போல் கல்லாறு பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில், கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டு அழித்துள்ளனர். அங்கு உற்பத்தியில் ஈடுபட்ட 3 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 5 பெரல் கோடாவும், கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களையும் சான்று பொருள்களையும் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (க-6)



# அடிக்கல் நடப்பட்டது

முல்லைத்தீவு,ஏப்.10

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் நிதி ஒதுக்கீட்டில் விசுவமடு கிழக்கு பாரதிபுரம் முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான சுற்று மதில் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது. நிகழ்வில் செல்வம் அடைக்கலநாதனின் பிரதிநிதியாக வட மாகணசபை முன்னாள் உறுப்பினர் ஆண்டிஐயா புவேனஸ்வரன் கலந்து கொண்டார். (க-222)

## முசலிப் பிரதேசத்தில்
# 1, 200ஏக்கரில் சிறுபோகம்

மன்னார்,ஏப். 10

முசலிப் பிரதேசத்தில் இம்முறை ஆயிரத்து 200 ஏக்கரில் சிறுபோகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முசலிப் பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் சுஜிதரன் தெரிவித்தார்.

முசலிப்பிரதேசத்தில் பெரும்பொக நெல் அறுவடை நிறைவடைந்துள்ள நிலையில், வியாயடிக்குளத்தில் ஏழு அடிக்கும் அதிகமாகவே தண்ணீர் இருப்பதனால், இந்த முறை சிறுபோக பயிர்ச்செய்கை விதை நெல்லுக்காக ஆயிரத்து இருநூறு ஏக்கரில் பயிர் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முசலிப் பிரதேச நீர்பாசனப் பொறியியலாளர் சுஜிதரன் தெரிவித்தார். (க-213)

# சட்டவிரோதமான சீனிப்பாணி உற்பத்தி நிலையம் முற்றுகை



வவுனியா,ஏப்.10

தேன் உற்பத்தி நிலையம் என்ற பெயரில் சட்டவிரோதமாக இயங்கி வந்த சீனிப்பாணி உற்பத்திநிலையம் வவுனியாவில் நேற்று அதிகாலை 5 மணியளவில் முற்றுகையிடப்பட் டுள்ளது.

இதில் வெளிமாவட்டங்களுக்கு விற்பனை செய்வதற்கு எடுத்துச் செல்லப்பட தயார்நிலையிலிருந்த 116 சீனிப்பாணிப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக வவுனியா பொதுச் சுகாதாரப்பரிசோதகர் க. தியாகலிங்கம் தெரிவித்தார்.

பொதுமக்கள் வழங்கிய இரகசியத்தகவல் ஒன்றின் அடிப்படையில் ஓமந்தை சுகாதாரப்பரிசோதகர், நொச்சிமோட்டை சுகாதாரப்பரிசோதகர்ஆகியோர் கூட்டாக இணைந்து, வவுனியா பொது சுகாதாரப்பரிசோதகதர் தலைமையில் சமயபுரம் பகுதியில் இயங்கி வந்த சட்டவிரோத சீனிப்பாணி உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது சீனிப்பாணியைத் தேன் என்று தெரிவித்து 116 போத்தல்களில் அடைக்கப்பட்ட சீனிப்பாணி மலையகப்பகுதிகளில் விற்பனைக்காக எடுத்துச்செல்லப்படவிருந்தமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

உற்பத்தியாளரின் பெயர் விபரங்கள் திகதியிடப்பட்ட சுட்டுத்துண்டுகள் ஒழுங்கு முறைப்படி காணப்படாத எந்வொரு தேன் போத்தல்களையும் அல்லது உணவுப் பொருள்களையும் பொதுமக்கள் கொள்வனவு செய்யவேண்டாம். இவ்வாறு சீனிப்பாணியை தேன் என்று தெரிவித்து விற்பனை செய்யப்பட்ட பல சட்டவிரோத போத்தல்கள் எங்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. தேன் கொள்வனவு செய்யும்போது உற்பத்தியாளரின் சுட்டுத்துண்டு இல்லாத பொருள்களை கொள்வனவு செய்ய வேண்டாம். என்று பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

உரிய சுகாதார முறைப்படி மேற்கொள்ளப்படாமல் சொப்பின் பையில் இட்டு உந்துருளிகளில் விற்பனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பாண், பனிஸ், கடதாசிப் பையில் வேறு தேவைகளுக்குப்பயன்படுத்திய பாண் பெட்டியிலிருந்த உரப்பை என்பனவும் இன்று காலை மரக்காரம் பளை வீதியில் கைப்பற்றப்பட்டுள்ளன. இதற்கு முன்னரும் இவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சுகாதார விதிமுறைகள் அற்ற உணவுப் பண்டங்களைத் தொடர்ந்தும் விற்பனை செய்து வருகின்றார்கள்.

இவர்களுக்கு எதிராகவும், கைப்பற்றப்பட்ட பொருள்களும் நேற்று நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க)

# பொலிஸார் பக்கச்சார்பாக நடப்பதாக சின்னப்புதுக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஏப்.10

ஓமந்தைப் பொலிஸார் பக்கச்சார்பாக நடப்பதாக தெரிவித்து சின்னப்புதுக் குளம் மக்கள் பிரதிபொலிஸ் மா அதிபர் பணியக வாயிலில் முற்றுகை போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.



வவுனியா, ஓமந்தைப் பொலிஸார் பக்கச் சார்பாக நடப்பதாகவும், தங்களை தாக்கியவர்களிடம் இலஞ்சம் பெற்றுக் கொண்டு தாக்குதலில் ஈடுபட்டவர்களை கைது செய்யவில்லை என தெரிவித்து சின்னப்புதுக்குளம் மக்கள் வன்னிமாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் பணியகத்தின் முன்திரண்டு முற்றுகையிட்டனர்.

நேற்று முன்தினம்மாலை 6 மணிக்கு வவுனியா ஏ9 வீதியில் உள்ள பிரதிபொலிஸ்மா அதிபர் காரியாலயத்தின் பிரதான வாயில்முன் ஒன்று கூடிய சின்னப்புதுக்குளம் மக்கள் தமக்கான நீதியைப் பெற்றுத் தருமாறு பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கோரினர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :

கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஓமந்தை சின்னப்புதுக்குளம் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இரு உந்துருளிகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன், மூன்று பேர் காயமடைந்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சின்னப்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 2 பேரை ஓமந்தைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். அதன் தொடர்ச்சியாக நேற்றும் சின்னப்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த மூவரை பொலிஸார் சந்தேகத்தில்கைது செய்தனர்.

ஓமந்தைப் பொலிஸார் தம்மை தாக்கியவர்களிடம் இலஞ்சம் பெற்றுக் கொண்டுதமது கருத்துகளை கேட்காது தம்மீது தாக்குதல் நடத்தி தமது சொத்துக்களை சேதப்படுத்தி அழித்தவர்களை கைது செய்யாது, அவர்களுக்கு சார்பாக நடப்பதுடன், தமக்கு எதிராக செயற்படுகின்றனர் என அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

ஓமந்தைப் பொலிஸார் மீது எமக்கு நம்பிக்கை யில்லை எனத் தெரிவித்தே சின்னப் புதுக்குளம் கிராம மக்கள் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர அபயவிக்கிரமவின் அலுவலக வாயிலில் திரண்டு முற்றுகையிட்ட னர்.

இதன்போது மக்கள் சார்பாக சிலரை அழைத்த பிரதி பொலிஸ்மா அதிபர் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், சின்னப்புதுக்கு ளம் கிராமத்துக்குரிய பாதுகாப்பை வழங்குவதாகவும் உறுதியளித்தையடுத்து, அதனையேற்ற கிராம மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

டிப்பர், ஹன்ரர் ரக வாகனம், பிக்கப் என்பவற்றில் ஆண், பெண் என்ற வேறுபாடு இல்லாது கிராமத்தைச் சோந்த 50 இற்கும் மேற்பட்டோர் பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயம் முன் திரண்டு கோசமிட்டிருந்தனர். (க-110)

# மதங்களை மதிக்காவிடினும் மிதிக்காதிருக்க வேண்டும்

## ஜெகதீஸ்வரக் குருக்கள் தெரிவிப்பு

மன்னார்,ஏப்.10

இந்து மக்களாகிய நாம் எல்லோர் மதத்தையும் மதிக்க வேண்டும். நாம் மதித்து வாழ்கின்றோம். மற்றைய மதங்களை மதிக்காவிட்டாலும் மற்றைய மதங்களை மிதியாதிருக்க வேண்டும்.

சைவ சமயத்திலே மற்றைய மதங்களை மதிக்கின்றோம். அவர்களை மிதியாதிருக்கின்றோம்.

இதனால்தான் நாவலர் பெருமான் மற்றைய மதங்களை மதித்து பைபிளைக் கூட தமிழில் மொழி பெயர்த்து வெளியுலகுக்கு கொண்டு வந்தார் என சோதிட ஆலோசகரும், இந்துசமய பிரதமகுரு, சர்வதேச இந்து மத குருபீடம்புராதன வாரியப்பர் தலைவருமான கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தெரிவித்தார்.

மன்னாரில் கலாநிதி மனோகரக் குருக்களின் 7ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் கலாநிதி மனோகரக் குருக்களின் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் இதன் பொருளாளர் சிவசிறி வீ.விஜயபாபு குருக்கள் தலைமையில் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது . எமது கலாசார விழுமியங்களை பேண வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்து கலாசாரத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மன்னாரில் வாழும் இந்து மக்கள் மதத்தை வளர்ப்பதற்காக எவ்வளவோ பாடுபடுகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களை விட அவர்கள் கடுமையாகப் பாடுபடுகின்றார்கள். மன்னாருக்கு வந்து செல்லும் பெரியவர்கள் பல தடவைகள் இதனைக் கூறியுள்ளனர்.

நீங்கள் இங்கு செய்கின்ற பணிகளை நாங்கள் யாழ்ப்பாணத்திலும் காண முடியாது. பல இடர்பாடுகளினும் பல இன மக்களுக்கிடையே உங்கள் பணிகளை செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்றார். (க-60)

# தவக்கால தியானங்கள்

## கேட்டால் கினிதுமை

இயேசுக் கிறிஸ்து பாடுபட்டு சாவடைந்ததை உருக்கத்துடன் துக்கம் கடைப்பிடிக்கும் இந்தத் தவக்காலத்தில் கத்தோலிக்கர்கள் பலரும் பல்வேறு இடங்களுக்கு யாத்திரை செல்வார்கள். அந்த வகையில் வடக்கு மாகாண குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்ட கத்தோலிக்கர்கள் பலரின் தவக்கால யாத்திரைக்கு உகந்த இடமாக தென்னிலங்கையில் உள்ள கினிதுமை மாறிவருகிறது.

தவக்காலத்தில் பலர் ஒன்றிணைந்து ஒரு பொது இடத்துக்குச் சென்று வழிபாடுகள், திருப்பலிகள், ஆராதனைகள் போன்றவற்றின் மூலமாக இயேசுவின் துக்கத்தைப் பகிர்வதும் அவருடன் ஒன்றிணைவதும் சிறந்த விடயம். அதில் தவறொன்றும் இல்லை. ஆனால் கினிதுமை அல்லது தவக்கால யாத்திரை என்ற பெயரில் இலங்கை அளவில் ஓர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளல் என்பது இயேசுவை மேலும் சாகடிக்கும் செயலே தவிர அதில் எவ்விதப் புண்ணியங்களும் வந்து சேரப்போவதில்லை.

இப்பேதெல்லாம் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கையில் உள்ள கினிதுமைக்கு யாத்திரிகர்களைக் கொண்டுசெல்லும் பேருந்துகள் பலவும் வரும்போது கொழும்பு மிருகக்காட்சிச் சாலை, பால் பண்ணைகள், வணிக வளாகங்கள், ஏகப்பட்ட சுற்றுலாத் தலங்கள் போன்வற்றில் நின்றுதான் புறப்படுகின்றன.

என்றால் இந்த யாத்திரைப் பயணத்தில் பயனென்ன இருக்கமுடியும். தவக்காலத்தில் உள்ள துக்க நாள்களில் ஒறுத்தல்களைக் கடைப்பிடித்து, அந்த ஒறுத்தல்களால் உண்டான சேமிப்புக்களை உயிர்ப்புப் பெருவிழாவின் போது இல்லாதவர்களுடன் பகிருங்கள் என்று சொல்கிறது கத்தோலிக்க திருச்சபை. இதற்கும் கினிதுமைக்கு சென்று வருபவர்களின் பயணத்துக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்.

வருடம் முழுக்க ஆடம்பரத்துடன் வாழ்கிறோம். தவக்காலத்தில் எமது ஆடம்பரங்களை இரட்டிப்பாக்குகிறோம். அந்தோனியார் பெருவிழா, அன்னம்மாள் பெருவிழா, சூசையப்பர் பெருவிழா, விண்ணேற்புப் பெருநாள், புத்தாண்டுக் கொண்டாட்டங்கள், கிறிஸ்து பிறப்புப் பெருவிழா இவற்றுக்கும் தவக்காலத்துக்கும் உள்ள வேடுபாடு படிப்படியாக இல்லாமல் போகின்றமை வேதனையே. சிந்திப்போம்...



## சிறுவர் சந்தை

வவுனியா,ஏப்.10

பூந்தோட்டம் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் வருடாந்த சந்தை மற்றும் பொருள்காட்சி நிகழ்வும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் முன்பள்ளிகளின் இணைப்பாளர் முனாப்ரா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ஜி ரி . லிங்கநாதன் ,எஸ். மயூரன் ,உதவிக் கல்விப்பணிப்பாளர் தர்மபாலன் முன்பள்ளி இணைப்பாளர் சசிகலா, ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-110)

# வன்னிக்கு விவசாய அபிவிருத்தியில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்

## கூட்டமைப்பு கோரிக்கை

மன்னார்,ஏப்.10

வன்னி மண் விவசாய பூமி விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்று தெரிவித்ததோடு, வன்னி மக்களுக்கான தொழிற்சாலைகளையும் உருவாக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி மூலத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் செய்ய வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாலை மூன்று மணியளவில் வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது இதன் போது அவர் இந்த கருத்தைத் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது;

மூன்று மாவட்டங்களிலும் ஆழமான தொழிநுட்ப அபிவிருத்தி, மக்களின் வாழ்வாதார மேம்பாடு, தடை இல்லாத தொழில் வாய்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்தி கொடுப்பதற்கு என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும், அவற்றில் வரும் இடையூறுகளை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்று கலந்துரையாடப்பட்டது .

அதன்படி விவசாயம் இன்று முற்று முழுதாக இயந்திரமயப்படுத்தப்பட்டுள்ளதால், அதை நம்பி இருக்கும் தொழலாளிகள் வருமான இழப்புக்களை சந்தித்தாலும், இன்று கமக்காரர்களும் பாரிய முதல் இழப்பை சந்திக்கும் சூழ்நிலை உள்ளது.

பல நெல் அரைக்கும் ஆலைகள் இயங்காமல் உள்ளன. அவற்றை இயங்க வைப்பதற்கு ஆவன செய்தல் மற்றும் பால் பதனிடல், கருவாடு மதனிடல் போன்ற தொழிற்சாலை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து மக்களின் வாழ்வியலை முன்னேற்றுவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவ மோகன் தெரிவித்தார். (க-213)

## சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

மன்னார்,ஏப்.10

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் கலைநிகழ்வுகளும் நானாட்டான் பிரதேசசெயலகத்தில் நடைபெற்றது. 2019 ஆம் ஆண்டுக்கான முன்பள்ளி ஆசிரியர்களுக்கான குறுங்கால தரப்படுத்தல் பயிற்சி நெறி இறுதிநாள் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணியளவில் நானாட்டான் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கடந்த 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, பயிற்சியில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. (க-213)




# போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை திறப்பு

கிளிநொச்சி,ஏப்.10

பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறச் சங்கத்தின் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையை நேற்றுமுன்தினம் பகல் 12 மணியளவில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

சங்கத்தின் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கள் சில வேளைகளில் விற்பனைக்கு அப்பால் எஞ்சியவற்றை நிலத்தி ஊற்றுவது அல்லது குறைந்த விலையில் ஏனைய வடிசாலைகளுக்கு விற்பனை செய்து வந்தனர். இதனால் தொழிலாளர்களுக்கும் சங்கத்துக்கும் பெரும் வருமான இழப்பு ஏற்பட்டு வந்தது. இதனை தொடர்ந்தே போத்தலில் கள் அடைப்பதற்கான தொழிற்சாலை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. (க-214)

# வடக்கு அபிவிருத்தி அமைச்சினால் வவுனியாவுக்கு 24 மில். ஒதுக்கீடு




வவுனியா,ஏப்.10

வவுனியா மாவட்டத்தில் நீண்டகாலமாக சீரமைக்கப்படாது கைவிடப்பட்ட குளங்களை சீரமைக்கவும், செட்டிகுளம் ஆதார மருத்துவமனையின் குடிநீர் வழங்கலுக்காகவும் வடக்கு அபிவிருத்தி அமைச்சினால் 24.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் மக்கள் இடம்பெயர்ந்த பிரதேசங்களில் பல குளங்கள் நீண்டகாலமாக சீரமைக்கப்படாது கைவிடப்பட்டுள்ளநிலையில் காணப்படுகின்றன. இதனால் மீள்குடியேறியுள்ள விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக வவுனியா, ஓமந்தை, நெடுங்கேணி, செட்டிகுளம் ஆகியகமநல அபிவிருத்தி நிலையங்களுக்குட்பட்ட 4 குளங்களை சீரமைப்பதற்காக 14 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார். இதேநேரம் செட்டிகுளம் ஆதார மருத்துவமனையில் குடிநீர் வசதியை மேம்படுத்தும் முகமாக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கபட்டுள்ளதாகவும், அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வவுனியா பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.மகேந்திரன் தெரிவித்தார். குறித்த இரு வேலைதிட்டங்களுக்குமாக ரூபா 24.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-110)

# நொதேர்ன் பவர் நிறுவனத்தை கொண்டுவந்தவர் மாவை எம்.பி.

## குற்றஞ்சாட்டுகிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஏப். 10

நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையத்தை வலிகாமத்துக்குக் கொண்டுவந்தவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா என்று குற்றஞ்சாட்டி யுள்ளார், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன். அதனால்தான், இதற்கு எதிரான மக்கள் போராட்டங்களில் அவர் கலந்து கொள்ளவில்லை என்றும் கூறினார்.

யாழ்பாணம் கட்டப்பிராயிலுள்ள தனது வீட்டில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

சுன்னாகத்தில் உள்ள நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிறுவனம் நிலத்தடிநீர் மாசுறும் வகையில் கழிவு எண்ணெயை நிலத்துக் குள் செலுத்தியது. அதனால் நிலத்தடி நீர் மாசடைய அது காரணமாகிவிட்டது என்று உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்புக் கூறியுள்ளது. பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்கு 2 கோடி ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் உயர் நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

அங்கு தண்ணீர் மாசு பற்றி ஆராய்வதற்காக குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

மாகாண சபையும் ஒரு குழுவை நியமித்தது. கொழும்பு அரசிலிருந்தும் சிலர் சுன்னாகத்துக்கு வந்து நிலைமைகளைப் பார்த்தனர். எவ்வாறிருப்பினும் நொதேர்ன்பவர் நிறுவனத்தைப் பாதுகாக்கின்ற வகையில்தான் மாகாணசபையும் கொழும்பு அரச அலுவலர்களும் நடந்திருக்கின்றார்கள். இது மிகத் தவறு.

**இழப்பீடு போதாது**

தண்ணீர் பாதித்ததால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இழப்பீடாக 2 கோடி வழங்குமாறு உத்தரவிட்டாலும் அந்தத் தொகை போதாது.

**பலருக்கும் இடி!**

உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, சேனாதிராசா போன்ற தவறான முடிவுகளை எடுக்கக் கூடியவர்க ளுக்கு நிச்சயமாக ஒரு பலத்த அடியாகவே இருக்கும் என்றுதான் கருதுகிறேன்.

நொதேர்ன் பவர் நிறுவனத்தில் தவறு இல்லைஎன்று அதற்கு ஆதரவாகப் பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு உயர் நீதிமன்றம் உண்மையை ஓரளவுக்கு புட்டு வைத்திருக்கின்றது - என்றார். (த)

## 106 அலுவலர்களுக்கான நியமனம் வழங்கல்



யாழ்ப்பாணம்,ஏப். 10

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அரச அலுவலகங்களில் பணி புரிவதற்கான பல்வேறு பதவி நிலைகளுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 91 அலுவலக உதவியாளர்கள் , 4 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (குடிசார்) மற்றும் 11 குடியேற்ற அலுவலர்கள் உள்ளிட்ட 106 அலுவலர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கான பரீட்சைகள் மற்றும் நேர்முகத் தேர்வுகள் வருட ஆரம்பித்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.நிகழ்வில் அமைச்சின் செயலர்கள் ,அரச உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (க-7)

## துர்நாற்றத்தை கட்டுப்படுத்த இரசாயனத்திரவம் தெளிப்பு

செங்கலடி,ஏப்.10

மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபையால் சேகரிக்கப்பட்டு வாவியோரம் கொட்டப்படுகின்ற திண்மக்கழிவுகளிலிருந்து வெளியாகும் துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இரசாயன திரவம் பயன்படுத்துவது வெற்றியளித்துள்ளது,

குப்பைகளிலிருந்து வெளியாகும் துர்நாற்றம் இரசாயன திரவ பயன்பாட்டையடுத்து 65 சத வீதம் கட்டுப்பட்டுள்ளதாக ஏறாவூர் நகர சபை முதல்வர் அப்துல் வாஸித் நேற்றுத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபை ஆதிக்க எல்லைக்குள் வீடுகள், சந்தைகள் மற்றும் வீதிகளிலிருந்து சேகரிக்கப்படும் குப்பைகள் பிராணிகளின் கழிவுகள் என்பன பல வருடகாலமாக வாவியோரம் கொட்டப்படுகின்றன.

இதனால்வாவி மீன்களுக்கு பாதிப்பு ஏற்படுவது மாத்திரமன்றி அயற்பிரதேசத்திலுள்ள பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவந்தனர்.

இந்தப் பிரச்சினைக்குத் நிரந்தரத்தீர்வு காணும்முகமாக அரசியல் வாதிகள் பல திட்டங்களை முன்னெடுத்த போதிலும், எதுவும் ஆக்கபூர்வமானதாக அமையவில்லை.

இந்த நிலையில் துர்நாற்றத்தைக்கட்டுப்படுத்துவதற்கு நகர சபையினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குப்பை கொட்டப்படும் இடத்தை அண்மித்த பகுதியில் உல்லாசப்பயணிகள் பூங்கா, பாடசாலை, கலாசார மண்டபம், பொது விளையாட்டு மைதானம் , மீனவர் விடுதி, வழிபாட்டுத் தலம் மற்றும் பிரதேச செயலகம் என்பனவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## உதவி மாவட்ட செயலராக ரஜீவ் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வெற்றிடமாகக் காணப்பட்ட உதவி மாவட்டச் செயலர் வெற்றிடத்துக்குத் கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் கடந்த 8ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உதவி மாவட்டச் செயலகப் பணியாற்றிய சா.சுதர்சன் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளராக நியமி க்கப்பட்டதால் அந்த வெற்றிடம் ஏற்பட்டது. அந்த இடத்துக்கே கரவெட்டி பிரதேச செயலகத்தில் பணியாற்றிய ரஜீவ் உதவி மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்டு ள்ளார். அவர் நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

## விற்பனை சந்தையும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம்,ஏப்.10

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் சிறுவர் பெண்கள் பிரிவில் புதுவருட விற்பனைச் சந்தையும்,கண்காட்சியும் இடம்பெறவுள்ளது. இன்று காலை 10 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (க)

## உரிமைப் போராட்டத்துக்கு சமமாக அபிவிருத்தி தேவை

### வியாழேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொக்கட்டிச்சோலை, ஏப். 10

உரிமை சார்ந்த போராட்டத்துக்கு இணையாக அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்களைக் கொண்டு செல்ல வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்ட, அழிந்துபோயிருக்கின்ற கிராமங்களை மீளவும் கட்டியெழுப்ப முடியும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச. வியாழேந்திரன் தெரிவித்தார்.



நாட்டுக்காக ஒன்றிணைவோம் அரசதலைவர் வேலைத்திட்டத்தின் கீழ், உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, தாந்தமலைக் கிராமத்தில் மக்களுக்கு நிலக்கடலை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாந்தாமலைக் கிராமம் தாந்தாமலை முருகனைக் கொண்ட பிரசித்திபெற்ற கிராமம். இங்கு பல்வேறுபட்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய நிலையிருக்கின்றது.

இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமாகவிருந்தால் நாங்கள் முன்னெடுக்கின்ற உரிமை சார்ந்த வேலைத்திட்டம் உரிமைசார்ந்த போராட்டத்துக்கு இணையாக அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்களை கொண்டுசெல்ல வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் 10வருடங்கள் அல்ல இன்னும் 100 வருடங்கள் சென்றாலும் எமது கிராமங்கள் இவ்வாறேதான் காட்சியளிக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 161கிராமங்களில் கிராம சக்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எங்களுக்குத் தேவையானதை நாமே உருவாக்குவோம் எனும் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம்.

போதைப்பொருள் பாவனையில் இலங்கை மோசமான நிலைக்கு செல்கின்றது. பாடசாலை மாணவர்களுக்குக்கூட போதைப் பொருள் விநியோகிக்கின்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. போதைப்பொருளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தூக்குத்தண்டனை கொடுக்க வேண்டுமென அரசதலைவர் தீர்மானித்து வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றார்.

நாடுபோதையற்று சிறந்து மிளிரவேண்டும். எதிர்கால சந்ததி ஆரோக்கியமான சந்ததியாக கட்டியெழுப்பப்பட வேண்டுமென்ற நோக்கில் போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் நடைபெறுகின்றது என்றார். (த)

## மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணம் நீர்வேலி கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின் மஞ்சத் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறும்.

இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் வீதி வலம் வருவார்.

ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும்,மறுநாள் தீர்தோற்சவமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## வீதியால் சென்ற பெண்ணை தாக்கி தாலிக்கொடி அறுப்பு

சாவகச்சேரி, ஏப். 10

வீதியால் சென்ற பெண்ணைத் தாக்கி வீழ்த்திவிட்டு அவர் அணிந்திருந்த 5 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி மடத்தடியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

வடமராட்சி கிழக்கு உடுத்துறையைச் சேர்ந்த பெண் சாவகச்சேரி மடத்தடியில் உள்ள மகன் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் வந்து அயலில் உள்ள கோவிலுக்கு பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்துக்கு சென்றுள்ளார்.

வழிபாடுகளை முடித்துக் கொண்டு மருமகள் பேரப்பிள்ளை ஆகியோருடன் நடந்து வருகையில் அந்த வழியே உந்துருளியில் வந்த இருவர் போக்குவரத்துப் பொலிஸார் நிற்கி றார்களா என மருமகளிடம் கேட்டுள்ளனர்.

தாங்கள் கோவிலுக்குப் போய்விட்டு வருகிறோம் பொலிஸ் நிற்பது பற்றித் தெரியாது எனக் கூறிக் கொண்டிருந்தவேளையில் உந்துருளியின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தவர் இறங்கி மாமியாரைத் தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த ஏழரைப் பவுண் நிறையுடைய தாலிக்கொடியை அபகரித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

பெண்கள் சத்தமிடவே கோவிலடியில் நின்றவர்கள் நாலாபுறமும் வாகனங்களில் துரத்தியபோதிலும் கொள்ளையர்களைப் பிடிக்கமுடியவில்லை.

தாக்கப்பட்டதில் வீழ்ந்து காயமடைந்த பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணிகளில் கொள்ளையர்கள் தொடர்பான விவரங்களை சேகரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# நீதிமன்ற அறிவித்தல் கிடைக்கவில்லையாம்

கொழும்பு, ஏப். 10

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை தொடர்பான எந்த அறிவித்தல்களும் அவருக்கு வழங்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் தனது கீச்சகப் பதிவில், எமக்குத் தெரிந்த வரை கோத்தபாய ராஜபக்சவுக்கு எந்தவொரு வடிவத்திலான அழைப்பாணையும் கிடைக்க வில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, கோத்தபாய ராஜபக்சவின் பேச்சாளர் ஒருவரும், கோத்தபாய ராஜபக்ச இதுவரை அத்தகைய அறிவிப்புகளைப் பெற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ளார். அவரிடம் வழக்குகள் தொடர்பான அறிவித்தல்களை வழங்கப்பட்டதாக கூறப்படுவதையும் அவர் மறுத்துள்ளார். (ஒ.5)

# கோத்தாவுக்கு எதிராக வழக்கு குழப்பகரமான தகவல்கள்

கொழும்பு, ஏப். 10



கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்தில் பகிரங்க பதிவேட்டில் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அகிம்சா விக்ரமதுங்க தாக்கல் செய்துள்ள வழக்குத் தொடர்பான எந்த ஆதாரங்களும் இல்லை என்று அமெரிக்க அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பாக கோத்தாபய ராஜபக்சவிடம் இழப்பீடு கோரி, அகிம்சா விக்ரமதுங்க சிவில் பாதிப்பு வழக்கை கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

சான்பிரான்சிஸ்கோவைச் சேர்ந்த நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமான நிலையத்தால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக கூறப்பட்டது.


குறித்த சட்ட நிறுவனமோ, அகிம்சா விக்ரமதுங்கவோ, இதுபற்றி கருத்து எதையும் வெளியிடவோ, அறிக்கைகளை வெளியிடவோ இல்லை.

அகிம்சா விக்ரமதுங்கவின் வழக்குத் தொடர்பான அறிவித்தல் தமக்கு வழங்கப்பட்டது குறித்து கோத்தபாய ராஜபக்ச தன்னிடம் கூறினார் என அவரது உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தமிழர் ஒருவரின் சார்பில் தாங்கள் வழக்குத் தொடர்ந்து, அவருக்கு அதுபற்றிய அறிவித்தலை வழங்கியதாக பன்னாட்டு உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# வழக்கு ஆவணங்களை கோத்தாவிடம் கையளித்தோம்

## வெளியானது ஆதாரங்கள்



கொழும்பு, ஏப். 10

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகள் தொடர்பான அறிவித்தல் ஆவணங்கள் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான ஒளிப்பட ஆதாரம் வெளிவந்துள்ளது.

கலிபோர்னியாவின் மத்திய மாவட்ட நீதிமன்றத்தில் லசந்த விக்ரமதுங்கவின் மகள் அகிம்சா விக்ரமதுங்க தாக்கல் செய்த வழக்குத் தொடர்பாகவும், சித்திரவதையால் பாதிக்கப்பட்ட கனேடியத் தமிழர் றோய் சமாதானம் சார்பில் அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தாக்கல் செய்த வழக்குத் தொடர்பாகவும் கோத்தபாய ராஜபக்சவிடம் முறைப்படி அறிவிக்கப்பட்டது.

தெற்கு கரோலினாவைச் சேர்ந்த தனியார் சட்ட விசாரணை மற்றும் பாதுகாப்பு நிறுவனமான, பிரீமியர் குறூப் நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவே, கோத்தபாய ராஜபக்சவிடம் இந்த நீதிமன்ற வழக்கு அறிவித்தல்களைச் சமர்ப்பித்துள்ளது.

வணிக வளாகத்தின் வாகனத் தரிப்பிடத்தில் வைத்தே, இந்த நீதிமன்ற அறிவிப்புகள் கோத்தாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அப்போது கோத்தாபய ராஜபக்சவின் மனைவியும் அங்கிருந்தார். இதன்போது ஒளிப்படங்களும் எடுக்கப்பட்டன. அதன் ஆதாரத்தை, பிரீமியர் குறூப் வெளியிட்டுள்ளது. (ஒ.5)

## கோத்தாவுக்கு எதிராக

# வழக்குத் தாக்கலாகியுள்ளது ஏற்கிறது மகிந்த அணி

கொழும்பு, ஏப். 10

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்காவின் கலிபோர்னியா நீதி மன்றத்தில் அகிம்சா விக்ரமதுங்கவி னால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யின் தலைவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'இந்த ஆண்டு நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக கோத்தாபய ராஜபக்ச போட்டியிடுவார் என்று கருதப்படும் பின்னணியிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க குடியுரிமையைக் கைவிடும் கோத்தபாய ராஜபக்சவின் முடிவுக்கு தடையை ஏற்படுத்தவே, அவருக்கு எதிராக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. லசந்த விக்ரமதுங்க 2009 ஆம் ஆண்டு ஜனவரியில் படுகொலை செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் அவர் ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவுக்கு சென்று வந்திருந்த போதும், இப்போதே அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# பாதுகாப்பில் நெருக்கமடையும் இந்தியா - இலங்கை உறவு

கொழும்பு, ஏப். 10



ஆறாவது கட்ட இந்தியா - இலங்கை பாதுகாப்பு கலந்துரையாடல் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்திய பாதுகாப்பு செயலர் சுஞ்சய் மித்ரா தலைமையிலான இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் குழுவும், பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னான்டோ தலைமையிலான குழுவினரும் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பாக மீளாய்வு செய்வதற்காகவும், புதிய பரப்பில் ஒத்துழைப்புகளை விரிவுபடுத்திக் கொள்வதற்காகவும் இந்தப் பாதுகாப்புக் கலந்துரையாடல் 2012 ஆம் ஆண்டு தொடக்கம், ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

இருதரப்பு பாதுகாப்பு கலந்துரையாடலில், இரண்டு நாடுகளுக்கும் பொதுவான, பரஸ்பர பாதுகாப்பு நலன்கள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக நீண்ட பேச்சுக்கள் நடத்தப்பட்டன. (ஒ.5)

# கூட்டுப் பயிற்சி நிறைவு

கொழும்பு, ஏப். 10

இந்தியா - இலங்கை இராணுவத்தினருக்கு இடையில் இரண்டு வாரங்களாக நடந்து வந்த 'மித்ர சக்தி' கூட்டுப் பயிற்சி நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது.

இந்தியா - இல்ங்கை இராணுவத்தினர் ஆண்டு தோறும் நடத்தி வரும் 'மித்ரசக்தி' கூட்டுப் பயிற்சியின் ஆறாவது கட்டம், தியத்தலாவவில் உள்ள இராணுவ முகாமில் இடம்பெற்று வந்தது. மார்ச் 26ஆம் திகதி ஆரம்பித்த இந்தக் கூட்டுப் பயிற்சி நேற்றுமுன்தினம் முடிவடைந்தது.

14 நாள்கள் நடந்த இந்தக் கூட்டுப் பயிற்சியில், நகர மற்றும் கிராமப் புறங்களில் பல்வேறு தந்திரோபாய நடவடிக்கைகளை செயற்படுத்துவது தொடர்பான பயிற்சிகளில் இரண்டு நாடுகளின் இராணுவத்தினரும் ஈடுபட்டனர். இந்தக் கூட்டுப் பயிற்சியில் இரண்டு நாடுகளினதும் தலா 120 இராணுவத்தினர் பங்கேற்றனர். (ஒ.5)

# கொழுந்து பறிக்க சென்ற பெண் வீழ்ந்து சாவு

ஹற்றன், ஏப். 10

தேயிலைக் கொழுந்து பறிப்பதற்காக சாஞ்சி மலை மேல்பிரிவு தோட்ட மலைப்பகுதிக்குச் சென்ற பெண் தொழிலாளி தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீழ்ந்தவுடன் அவர் டிக்கோயா கிழங்கன் ஆதார மருத்துவமனைக்கு முச்சக்கர வண்டியில் கொண்டுசெல்லப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி என்று தெரிவிக்கப்பட்டது. (த)

# இலங்கைப் படையினருக்கு இந்தியா அதிகரித்த பயிற்சிகள் வழங்கவேண்டும்

## இந்திய பாதுகாப்புச் செயலரிடம் கோரிய மைத்திரி

கொழும்பு, ஏப். 10

படையினருக்கு இந்தியாவில் மேலதிக பயிற்சி வாய்ப்புகளை வழங்குமாறு இந்திய பாதுகாப்புச் செயலர் சஞ்ஜய் மித்ராவிடம், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு இரண்டு நாள் பயணமாக வந்தடைந்த இந்திய பாதுகாப்புச் செயலர் சஞ்ஜய் மித்ரா அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது, சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலுக்கும், ஆள்கடத்தலுக்கும் எதிராக கூட்டாக இணைந்து செயற்படுவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளது.

படையினருக்கு இந்தியா அளித்து வருகின்ற பயிற்சிகளுக்கு நன்றி தெரிவித்துள்ள அரச தலைவர், மைத்திரிபால சிறிசேன, இந்தகைய பயிற்சி வாய்ப்புகளை இன்னும் விரிவான முறையிலும், அதிகரிப்பதற்கும் வழி செய்யுமாறும் இந்திய பாதுகாப்பு செயலரிடம் கோரிக்கை விடுத்தார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டது. எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இருநாடுகளின் பாதுகாப்புச் செயலர்களுக்கும் இடையில் கலந்துரையாடல்களை நடத்தவும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னான்டோ மற்றும், இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். (ஒ.5)

# எட்டுவழிப்போக்குவரத்துத்திட்டம்நீக்கம் விவசாயிகள் மகிழ்ச்சியில் கொண்டாட்டம்

தமிழகம்,ஏப்.10
இந்தியாவின் சேலம்-சென்னைஆகியபிரதேசங்களுக்கு இடையே நிறுவப்பட விருந்த எட்டு வழிப் போக்குவரத்துத்திட்டத்துக்கான உத்தரவைச் சென்னை உயர் நீதிமன்றம் நீக்கியது.




இதையடுத்துசேலம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள்பட்டாசுவெடித்தும்இனிப்புகள்வழங்கியும், அரசுநட்டஎல்லைக்கற்களைப்பிடுங்கி எறிந்தும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

**பின்னணி**
இந்தப் போக்குவரத்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்போவதாக அறிவித்தமாநிலஅரசுவிவசாயிகள்மற்றும் பொதுமக்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி விவசாய நிலங்களைக் கையகப்படுத்தியது. எல்லைக் கற்களை நட்டது. இதற்கானஎதிர்ப்பைத்தெரிவிக்கும்பொருட்டும், இந்தத் திட்டத்தைக் கைவிடுமாறு வலியுறுத்தி விவசாயி கள் போராட்டங்களை நடத்தினர்.
இவ்வாறு போராட்டம் நடத்திய விவசாயிகள் மற்றும் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் மீது தடியடித் தாக்குதலையும் கைது நடவடிக்கையையும் தமிழக அரசு மேற்கொண்டிருந்தது.

## மல்லையாவின் மனு நிராகரிப்பு

லண்டன்,ஏப்.10
இந்திய வங்கிகளில் 9ஆயிரம் கோடி வரையில் கடன் பெற்ற இந்தியத்தொழில்அதிபர்விஜய் மல்லையா கடனைத் திருப்பிச் செலுத்தாமல் 2016ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து லண்டனுக்குத் தப்பிச் சென்றுவிட்டார்.
இந்தியாவின்சட்டநடவடிக்கையைத் தொடர்ந்து, விஜய் மல்லையாவை நாடு கடத்துவதற்குப் பிரிட்டன் உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது.
அதைச்செயற்படுத்தும்உத்தரவில் பிரிட்டன் உள்துறை அமைச்சகம் கையெழுத்திட்டதை எதிர்த்து விஜய் மல்லையாமேல்முறையீட்டுமனுவைத் தாக்கல்செய்தார்.
அவரை நாடு கடத்தும் விவகாரத்தில் அவரது சார்பில் மேல் முறையீடு செய்ய அனுமதி கோரும் மனு லண்டன் உயர் நீதிமன்றில் கையளிக்கப்பட்டது.
அதை லண்டன் உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்தது.





## லிபியாவில் உச்சமடைகின்றது உள்நாட்டுப் போர்

திரிபோலி,ஏப்.10
லிபியாவில் உள்நாட்டுப் போர்உச்சமடைந்துவருகிறது. லிபியாவின் தலைநகர்திரிபோலியில்நடந்த மோதலில் 21 பேர் சாவடைந்தனர். அங்கு அரசுக்கு எதிராகப் போராடி வரும் புரட்சிகர லிபிய இராணுவத்தின் தளபதி காலிபா ஹிப்தர் தனது படைகளைத் தலைநகர் திரிபோலியை நோக்கி முன்னேறும்படி கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார். இதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஐ.நா. ஆதரவு பெற்ற அரச படை திரிபோலியில் குவிந்தது. கடந்த சில தினங்களாக இருதரப்புக்கும்இடையே கடுமையான மோதல் நடந்து வருகிறது. இந்த மோதலில் இதுவரை 21 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. இந்த மோதலில் 14 சிப்பாய்களை இழந்துவிட்டதாகபுரட்சிகர லிபியஇராணுவம்கூறுகிறது. மேலும் 100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்திருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருதரப்பினர்இடையிலான கடுமையான மோதல் காரணமாக தலைநகர் திரிபோலியில் பதற்றமான சூழல் நீடிக்கிறது. திரிபோலியின் தெற்குப்பகுதியில் உள்ள இராணுவத் தளத்தைப் புரட்சிகர லிபிய இராணுவத்தினர் நேற்றுக் கைப்பற்றினர். அவர்களிடம்இருந்து இராணுவத் தளத்தை மீட்கும் முயற்சியில் அரச படைகள் ஈடுபட்டுள்ளன.

**பின்னணி**
வடக்குஆபிரிக்கநாடான லிபியாவில் 34 ஆண்டுகள்அதிபராகஇருந்தகடாபிக்கு எதிராக 2011ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
அவர் ஆட்சியில் இருந்து அகற்றி சாகடிக்கப்பட்டார். அத்துடன் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. அதன்பின்னர்2015ஆம் ஆண்டு ஐ.நா. ஆதரவுடன் தேசிய இடைக்கால பேரவையின் கீழ் ஆட்சி அமைந்தது. எனினும் அங்கு தொடர்ந்து அரசியலில்நிலையற்றதன்மை உருவானது. இதனால் அதேஆண்டுலிபியாவில் மீண்டும்அரசுக்குஎதிராக உள்நாட்டுப் போர் மூண்டது.
ஐ.எஸ். உட்பட பல்வேறு பயங்கரவாத அமைப்புகளும் அங்கு காலூன்றி தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் லிபியாவில் தொடர்ந்து அசாதாரண சூழல் நிலவி வருகிறது.

## கொங்கோவில் ‘எபோலா’; இதுவரை 600 பேர் சாவு

சயோசல்வோடர்,ஏப்.10
மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் ‘எபோலா’ வைரஸ் தாக்கத்தின் காரணமாகஇதுவரை600 சாவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
2014ஆம் ஆண்டு ‘எபோலா’ வைரஸால் கொங்கோவில் ஏற்பட்ட சாவுகளை விட கடந்த ஆண்டு ‘எபோலா’வின் தாக்கத்தால் ஏற்பட்ட சாவுகள் அதிகரித்திருப்பதாகக்கவலைதெரிவிக்கப்பட்டுள்ளது.
கொங்கோவின் மத்திய பகுதிகளில் ‘எபோலா’ வைரஸ் கடந்த ஆண்டே பரவியது. அங்கு இதுவரை சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 600 ஆக அதிகரித்துள்ளது.
மேலும் 1ஆயிரத்து 41 பேர் ‘எபோலா’ வைரஸ் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிக்கையிட்டிருக்கிறது ஐ.நா. எபோலா பரவ இருந்த 70ஆயிரம் பேருக்கு மேல் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு பரவல் தடுக்கப்பட்டுள்ளது.
தொடர்ந்து எபோலா வைரஸுக்கு எதிராக விழிப்புணர்வுகள், தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாக கொங்கோ அரசு தெரிவிக்கிறது.
இதற்கு முன்னர், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்கு ஆபிரிக்க நாடுகளான கினி, லைபீரியா, சியாரா லியோன் உட்பட 8 நாடுகளில் எபோலா வைரஸ் பரவியதில் 15ஆயிரத்து145 பேர்பாதிக்கப்பட்டனர். அதில் 11ஆயிரம்பேர்சாவடைந்தமைகுறிப்பிடத்தக்கது.



## இன்றைய நாள்

**மேடம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும். பணவரவு சீராக இருக்கும். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் புதிய முயற்சியால் கிடைக்கும்.

**இடபம்:** மனதில் தெய்வ நம்பிக்கை மேலோங்கும். தொழிலில்தேவையான மூலதனத்துடன் அபிவிருத்தி பணியைச் செய்வீர்கள். உறவினருக்கு கொடுத்த வாக்குறுதி நிறைவேறும்.

**மிதுனம்:** உறவினரால் தொந்தரவுக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி ஏற்படலாம். பண விஷயத்தில் விழிப்புடன் இருக்கவும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம்

**கடகம்:** திட்டமிட்ட பணி சிறப்பாக நிறைவேறும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் முன்னேற்றம் காண்பீர்பீள். எதிர்பார்த்ததை விட ஆதாயம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** சமயோசிதமாக செயல்பட்டு வளர்ச்சியடைவீர்கள். தொழில், உற்பத்தி, விற்பனையால் வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப்பணம் வசூலாகும்.

**கன்னி:** மனதில் குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் சார்ந்த குறைகளை உடனடியாக சரி செய்யவும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்தத பணக்கடன் கிடைக்கும்.

**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். சொத்து ஆவணங்களை பிறர் பொறுப்பில் தர வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** உற்சாக மனநிலையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உருவாகும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடத்துவீர்கள்.

**தனுசு:** வாழ்வில் முன்னேற புதிய வாய்ப்பு உருவாகும். நம்பிக்கையுடன் வளர்ச்சி நோக்கில் திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**மகரம்:** எவருக்கும் தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது. பணவரவு சீராக இருக்கும்.

**கும்பம்:** மனதில் சஞ்சலம் ஏற்பட்டு மறையும். தொழில் வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். உறவினர் வகையில் செலவு ஏற்படும்.

**மீனம்:** தடைகளை முறியடித்து முன்னேறுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அரிகரிக்கும். உபரி பணவரவை முதலீடாக மாற்றுவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

உதயன்
புதன் பொய்கை
ஏப்ரல் 10, 2019
@UthayanPrint








# அன்பமுதூறும் அயலார் கச்சிதமான ஆற்றுகை!




பாலா

நாடகம் என்பது மிகச்சிறந்ததும் மிகுந்த வலிமையுடையதுமான மக்கள் ஊடகம் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை என்பதை "அன்பமுதூறும் அயலார்" என்ற நாடகம் மீண்டும் ஒரு முறை மிகவும் ஆணித்தரமாக நிறுவியுள்ளது. கடந்த மாதம் 8ஆம் திகதி மருதானை "எல்பின்ஸ்டன்" அரங்கில் அரச நாடக விழாவில் இந்த நாடகத்தை நான் பார்த்த போது எனக்குள் ஏற்பட்ட மன உணர்வுகளை இங்கு நான் பதிவு செய்ய முய்படுகின்றேன்.

சரியாக மாலை 6.30 மணிக்கு நாடகம் ஆரம்பிப்பதற்கான மூன்றாவது மணி அடித்ததும்... இருண்டு கிடந்த அரங்கிற்கு படிப்படியாக ஒளி பாய்ச்சப்பட்ட போது... பிரமாண்டமாய் காட்சி தந்த அழகிய மலைத் தொடர்கள் மத்தியிலே...ஓர் தேனீர் கடையும் ஓர் மதுக்கடையும்... அவற்றைச் சுற்றி மக்கள் கூட்டமும் என அரங்கு அழகாக ஜொலித்தது. அரங்கின் இடது பக்க மூலையிலே இருக்கும் ஓர் உலர்ந்த மலைக்குன்றின் உச்சியில் ஒரு மனிதன் நிற்கின்றான்...! கீழே கூட்டமாக நிற்கும் மனிதர்கள் தேனீர் அருந்திக் கொண்டும்... மதுவை பருகியவாறும் மலை உச்சியிலே தன்னந்தனியனாக நிற்கும் அந்த மனிதனையே அண்ணாந்து பார்த்தவாறு நிற்கின்றார்கள்...!

அரங்கில் தோன்றிய இந்தப் பிரமாண்டமான காட்சி அமைப்பும் அரங்கிலே நடிகர்கள் நிற்கின்ற விதமும் பார்வையாளரை பிரமிக்க வைத்து பார்வையாளரதும் ஐம்புலன்களையும் அரங்கை நோக்கி காந்தம் போல் இழுத்து விடுகின்றது. அரங்கிலே என்ன நடக்கப் போகின்றது என்ற பார்வையாளனின் எதிர்பார்ப்பு அதிகரிக்கும் போது நாடகப் பாத்திரங்கள் அசையத் தொடங்குகின்றன...!

பாத்திரங்கள் அசைந்து நாடகம் நகரத் தொடங்கிய சிறிது நேரத்தில் மலைக் குன்றின் உச்சியில் நிற்கும் மனிதன் அதில் இருந்து குதித்து தற்கொலை செய்ய முயன்று கொண்டிருக்கின்றான் என்றும் அவன் மலையிலிருந்து வீழ்ந்து தற்கொலை செய்வதை வேடிக்கை பார்த்து ரசித்து மகிழவே மக்கள் அங்கு கூடி நிற்கின்றார்கள் என்ற அதிர்ச்சிச் செய்தியை நாடக இயக்கம் வெளிப்படுத்துகின்றது...!



அன்பமுதூறும் அயலவரை யாசித்து நிற்கும் இந்த நாடகத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேற்படி அதிர்ச்சிச் செய்தியானது இதயமுள்ள மனிதர்களின் இதயத்தில் ஈட்டி பாய்ச்சப்படுவது போன்ற வேதனையை ஏற்படுத்தியதோடு...! அறிவுத் துறையில் பெரும் வளர்ச்சியைக் கண்டு வருவதாகச் சொல்லப்படும் இந்த 21ஆம் நூற்றாண்டில் இப்படியும் மனிதர்களா? என்ற கேள்வியை எழுப்பியவாறு நாடகம் தொடர்கின்றது...! பாத்திரங்கள் தொடர்ந்து அசைகின்றன.

"இந்த மனிதன் மலை உச்சியில் இருந்து குதித்துத் தற்கொலை செய்யப் போகும் இந்த அற்புதமான காட்சியை என்ரை அவர் காணாமல் தேனீர் கடையில் நிற்கின்றார். அவரை ஒருக்கால் கெதியா வரச் சொல்லுங்கோ" என அங்கலாய்க்கும் மூதாட்டி...

மலையிலிருந்து வீழ்ந்து தற்கொலை செய்யப்போகும் இந்த மனிதன் எந்த இடத்தில் வீழ்ந்து சாவான்..? என ஆராய்ந்து அவன் வீழ்ந்து மடியப்போகும் அந்த இடத்தை அடையாளப்படுத்த முயற்சிக்கும் இரண்டு பொலிஸார்... அத்தோடு அக்கோரக் காட்சியை காண வந்திருக்கும் ஒரு முதியவர்...!

அந்த மனிதன் மலையிலிருந்து விழும் அந்தக் கோரக் காட்சியை தத்ரூபமாகப் படம் பிடித்து... அந்தப் படங்களைப் பிரசுரிப்பதன் மூலம் பணம் சம்பாதிக்க முயலும் இரண்டு படப்பிடிப்பாளர்கள்..! படை வீரனுக்குரிய மிடுக்குடன் கம்பீரமாக கடந்து வந்து அங்கு வேடிக்கை பார்க்கக் காத்திருந்த ஒரு முதியவர் இருந்த இடத்தை அதிகாரத்தோடு அபகரித்து இந்த இடத்திலே தான் இருந்து கொண்டு...! "இந்த மனிதன் எப்போது விழுவான்" என்ற கேள்வியை எழுப்பியவாறும்...! "இவன் எப்படியும் விழுந்தேயாக வேண்டும்"என அதிகாரத் தோரணையில் கட்டளை பிறப்பித்தவாறும் அந்த மனிதன் மலையில் இருந்து வீழ்ந்து மடியப் போகும் காட்சியை காணும் ஆவலுடன் காத்திருக்கும் ஒரு படை வீரன்...!

"இன்னும் இரண்டு மணி நேரத்தில் மலை உச்சியிலிருந்து குதிப்பான்" என்றும்...! "இல்லை... இல்லை அவன் குதிக்க மாட்டான்"என்றும் பந்தயம் கட்டிச் சூதாடிக்கொண்டிருக்கும் இரண்டு கனவான்கள்..

"மூன்று குழந்தைகளை பெற்றதும் ஒரு தந்தைக்குரிய கடமை என்றும்...!"ஐயோ....!! இந்த மனிதன் மலையிலிருந்து குதித்து தற்கொலை செய்ய மறுத்தால் அந்தத் தற்கொலைக் காட்சியை நேரில் பார்க்கும் அனுபவம் எனக்கு இல்லாமல் போய் விடுமே...!எனது பிள்ளைகள் வளர்ந்து..ஒரு மனிதன் தற்கொலை செய்து சாகும் போது எப்படி இருக்கும் என்ற கேள்வியை கேட்டால் நான் எப்படி பிள்ளைகளுக்குப் பதில் சொல்வது" என அங்கலாய்க்கும் மூன்று பிள்ளைகளின் தந்தை...

"தற்கொலை செய்யப்போகும் இந்த மனிதன் அரசுக்கு வரிகட்டியிருந்தால்..அவனை இந்த அரசு எப்படியாவது காப்பாற்றியே ஆக வேண்டும். எனவே அரசுக்கு இவனைக் காப்பாற்றும் படி விண்ணப்பம் செய்யுங்கள்" எனக் கூறிவிட்டு இந்த இடத்தை விட்டு நழுவிச் செல்லும் ஒரு கனவான்.

குடு..குடு என ஓடிவந்து இருக்க இடமில்லாததால் பெரிய கமரா பெட்டியின் மேல் ஏறி இருந்து கொண்டு இந்தக் கொலைக் காட்சியை பார்த்து ரசிக்கும் ஆவலில் கமரா பெட்டிக்கு சொந்தக்காரனோடு சண்டை செய்யும் ஒரு மூதாட்டி..

இந்தத்தற்கொலை காட்சி பற்றிய நேரடி அனுபவத்தை பொய்கள் நிறைந்த புனைவுகளுடன் பரபரப்பூட்டும் செய்தியாக்கி பணம் சம்பாதிக்க முயலும் ஓர் ஐரோப்பியச் செய்தியாளன்....

பரபரப்புடன் மேடையில் தோன்றி தற்



கொலை செய்ய முயலும் அவனைக் காப்பாற்ற முயற்சிக்காமல் அவனுக்கு பாவ மன்னிப்பு வழங்கி அவனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்யும் ஓர் கிறிஸ்தவ பாதிரியார்.

என ஒவ்வொரும் மனிதனும் மலைகுன்றின் மேல் நிற்கும் அந்த மனிதன் தற்கொலை செய்து சாகப் போகும் அந்தக் கோரக் காட்சியை நுகர்ந்து மகிழத் துடிக்கும் தமது மனத் துடிப்பை வெளிப்படுத்துவதன் மூலம் நவ தாராளவாத பொருளாதார அமைப்பின் நுகர்வுக் கலாசாரத்தின் கோரத்தனமான கொடுமையை வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் அதே வேளை...

"அன்பே சிவம்"எனப் போதிக்கும் சைவ சமயத்துக்கும் கிராமங்கள் தோறும் ஆலயங்கள் அமைத்து கோலாகலமாகத் திருவிழாக்கள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலத்தில்..

உன்னைப் போல் உன் அயலவரை நேசி என அயலவர் மீது அன்பைச் சொரிந்து...இந்த அயலவருக்காகச் சிறுவை சுமப்பதே இறைபணி எனப் போதிக்கும் கிறிஸ்தவ சமயம் பல்வேறு பிரிவுகளாக எமது மண்ணில் பல்கிப் பெரு வரும் 21ஆம் நூற்றாண்டில்...

கா்லொடிந்த ஆட்டுக்குட்டியை தனது புனிதமான தோள்களில் சுமந்து சென்று அதன் உயிருக்காகப் போராடி அந்த ஆட்டுக்குட்டிகளைக் காப்பாற்றிய புத்த பகவானின் "பௌத்த மதம்" இன்று அரச மதமாகி வளர்ந்து வரும் எமது தேசத்தில்..

மனிதத்தை...! மனித மான்புகளை...!மனிதப் பண்புகளை...! மனித உணர்வுகளை...!எல்லாம் வியாபாரப் பண்டமாக்கி..கோடி கோடியாகப் பணத்தைச் சம்பாதிக்க முயலும் இந்த "நுகர்வுக் கலாச்சாரம் எப்படி மனித மனங்களை ஆட்கொண்டது..?மனிதாபிமானமாகிய இந்த மோசமான சமூகத்தில் கையாலாகாத ஒருவனாக நானும் வாழ்ந்துகொண்டிருக்கின்றேனே எனப் பார்வையாளர்கள் ஒவ்வொருவரும் வெட்கித் தலை குனியும் போது நாடகத்திலே மீண்டும் ஒரு திருப்பம் ஏற்படுகின்றது.

▲ ▲ ▲ ▲ ▲

மலைக் குன்றின் உச்சியிலிருந்து பாய்ந்து தற்கொலை செய்யப் போகின்றான் என அறிவிக்கப்பட்ட அந்த மனிதன் தான் தற்கொலை செய்ய முயற்சிக்கவில்லை என்றும் மதுக்கடை முதலாளி தனது வியாபாரத்தைப் பெருக்குவதற்காகப் பத்து டொலர் பணத்தை தனக்குத் தருவதாகச் சொல்லி...! தன்னை மலை உச்சியில் கட்டி வைத்துள்ளார் என்றும் கூறி தன்னைக் காப்பாற்றும் படி உரத்த குரலில் வேண்டுகோள் விடுக்கின்றான்...!

ஓ....! மாண்பு மிக்க மனித உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் மேலான சிந்தனைகளையும் கூட மதிக்காமல் அவற்றையெல்லாம் வியாபாரப் பண்டமாக்கித் தனது மூலதனத்தைப் பெருக்க உதவும் உலகமயமாக்கல் பண்பாட்டின் முகத்திரையை கிளித்தெறிந்து முதலாளித்துவ சிந்தனைப் போக்கை இந்த நாடகம் நிர்வாணம் ஆக்குகின்றது...! இப்போது உலகமயமாக்கல் என்ற கோரத் தனமான கொள்கையை பாதுகாத்து வரும் நுகர்வுக் கலாசாரத்தின் மீது பெரும் கோபத் தீ பார்வையாளனின் உள்ளத்தில் மூண்டெழ ஆரம்பிக்கின்றது.

மதுக்கடை முதலாளி "முள்பாத்தி" என்ற பெயரில் மக்களை ஏமாற்றிய சதிச்செயலை அம்பலமாக்கிய போதும் நுகர்வுக் கலாசாரத்தால் பிடிக்கப்பட்ட மக்கள் அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை...! அந்த மலை அடிவாரத்தின் மறுபக்கத்தில் அதிசய நட்சத்திரங்கள் தோன்றப் போகின்றதென அதே முதலாளி அவிழ்த்து விட்ட இன்னொரு பொய்யை நம்பிக்கொண்டு அங்கு வேடிக்கை பார்த்த மக்கள் கூட்டம் மலை அடிவாரத்தின் மறுபக்கம் நோக்கி விரைகின்றார்கள்...!

தனது குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக பத்து டொலர் பணத்துக்கு ஆசைப்பட்டு தனது மனைவி பிள்ளைகளுக்கு சில நாள்களாவது நல்ல சாப்பாடு கொடுக்கலாம் என்ற நம்பிக்கையுடன் மலைக்குன்றின் மீது முதலாளியால் கட்டி வைக்கப்பட்ட அந்த மனிதன் இப்போது தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் வழியை அறியாதவனாய் மலையின் உச்சியில் கேட்போர் யாருமின்றி அனாதையாய் நிற்கின்றான்.

இப்போது அந்த மலை அடிவாரம் யாருமற்ற சூனிய வெளியாய் காட்சி தருகின்றது. அந்த மலையின் உச்சியில் மிகவும் ஆபத்தான நிலையில் தனித்து விடப்பட்ட அந்த ஏழை மனிதனோ தன்னைக் காப்பாற்றும் கதறுகின்றான். நுகர்வுக் கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு மனிதனின் காதுகளிலும் அந்த மனிதனின் அவலக்குரல் கேட்கவில்லை.

▲ ▲ ▲ ▲ ▲

அந்த ஏழை மனிதன் மீது கருணை கொண்ட ஒரு சிறுமி மிகுந்த கருணையுடன் மெல்ல.. மெல்ல அவை நோக்கி வருகின்றாள். மலையின் உச்சியில் நிற்கும்



அந்த மனிதனை கருணையுடன் நிமிர்ந்து பார்க்கின்றாள். அந்தச் சிறுமியால் தனித்து நின்று அந்த ஏழை மனிதனைக் காப்பாற்ற முடியவில்லை... மலை அடிவாரத்தில் இந்த இடத்தில்தான் அந்த மனிதன் விழுவான் எனத் தான் கருதிய இடத்தில் தடிப்பான ஒரு துணியை விரித்துவிட்டு அந்தச் சிறுமிபோகின்றாள். மேடையைசூழ்ந்திருந்த ஒளி மெல்ல மெல்ல அணைகின்றது.

இந்த நாடகத்தின் மூலம் பல்வேறுட்ட உணர்ச்சிகளுக்கு உள்ளாகி பெரும் மனச் சுமையை சுமந்து கொண்டிருந்த பார்வையாளனின் உள்ளம் அந்தச் சிறுமியின் செயலால் பெரும் நம்பிக்கையை பெறுகின்றது. இந்தக் கேவலமான நுகர்வுக் கலாசாரம் தத்தமது குடும்பங்களில் ஏற்படுத்தி வரும் தாக்கங்களைச் சிந்தித்தவாறு பார்வையாளன் அரங்கை விட்டு வெளியேறுகின்றான். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தின் ஒரு கம்யூனிஸ்ட்டாய் வாழ்ந்த லியேனிட் அன்ட்ரெய்ல் என்னும் நடாக ஆசிரியரால் ரசிய மொழியில் எழுதப்பட்ட இந்த நாடகம் நூற்றாண்டுக்குப் பின்னரான இன்றைய காலச் சூழலுக்கும் பொருத்தப்பாடான நாடகமாய் இருப்பது இந்த நாடக ஆசிரியரின் சிந்தனைச் சிறப்புக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய் உள்ளது.

▲ ▲ ▲ ▲ ▲

ஒரு நாடகத்தை மிகச் சிறந்த ஓர் நாட்கமாக்குவதில் நடிகர்களின் பங்கே மிகவும் முக்கியமானது என்பதை இந்த நாடகம் மீண்டும் ஒரு முறை மிக ஆணித்தரமாக நிறுவியுள்ளது. சிறந்த நடிகனாக ஒரு நடிகனை இனங்காண முடியாத அளவுக்கு இந்த நாடகத்தில் பங்கு கொண்ட அத்தனை நடிகர்களும் மிகச் சிறப்பான முறையில் நடித்துள்ளார்கள்.

குறிப்பாக பாதுகாப்பு வலய குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்களும் தம்து இயல்பான நடிப்பாய் பார்வையாளர் மனங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளனர்..!அத்தோடு இறுதிக் காட்சியில் மனிதாபிமான உணர்வை வெளிப்படுத்தும் உணர்வுடன் செயற்பட்டு பார்வையாளர் இதயங்களில் கருணைப் பூக்களை அள்ளிச் சொரிந்து விட்டுச் சென்ற அந்தச் சின்னஞ்சிறு சிறுமி பார்வையாளர்களது உள்ளங்களில் நிலைத்து விட்டாள்..! உண்மையிலேயே இந்த நாடகம் சிறந்த நாடகம் மட்டுமல்ல...! சிறந்த நடிப்புக்குரிய நாடகமுமாகும்.

ஏனெனில் ஒரு நாடகத்தில் ஒரு சில நடிகர்கள் மட்டும் சிறப்பாக நடித்தால் அது ஒரு சிறந்த நாடகம் எனக் கருதப்பட முடியாது. எல்லா நடிகர்களும் தத்தமது பாத்திரத்தை உணர்ந்து சிறப்பாக நடிக்கும் போதுதான் அந்த நாடகம் ஓர் சிறந்த நாடகமென பார்வையாளனால் கருதப்பட முடியும். அந்த வகையில் இந்தநாடகம் சிறந்த நாடகம்தான்.

அடுத்து இந்த நாடகத்திலே ஒளி அமைப்பு மிகவும் சிறப்பாக அமைந்தது...! ஒளியூட்டல் மூலம் காட்சிப் பின்புலமும்...! உணர்வுகளின் வெளிப்பாடும் மிகச் சிறந்த முறையில் இந்த நாடகத்திலே வெளிப்படுத்தப்பட்டது.

அந்த வகையில் ஒளியமைப்பாளருக்கு ஒரு சபாஷ். மேலும் இந்த நாடகத்தின் இசையமைப்பு மிகவும் வித்தியாசமாகக் கையாளப்பட்டமையானது இந்த நாடகத்தின சிறப்பை மேலும் ஒரு படி உயரச் செய்துள்ளது. அந்த வகையில் இந்த நாடகத்தின் நெறியாளர் க.சத்தியசீலனைப் பாராட்டியே ஆக வேண்டும்.

நாடகம் என்னும் மக்கள் ஊடகத்தின் வீரியத்தை நன்குணர்ந்து கொண்ட வர்த்தக உலகம் சின்னத்திரை நாடகங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருவதோடு...! மேடை நாடகங்களை அவ்வாறு பயன்படுத்த முடியவில்லை. அதனால் மக்களின் சிந்தனையைத் தூண்டும் மேடை நாடகங்களை படிப்படியாக இல்லாமலாக்கிக் கொண்டிருக்கும் இன்றைய காலச் சூழலில்...

பல்வேறு வகையான நெடிக்கடிகளுக்கு முகம்கொடுத்தவாறு இன்றைய காலச் சூழலுக்குத் தேவையான இந்த அற்புதமான நாடகத்தை தயாரித்து வழங்கிய செம்முகம் ஆற்றுகைக் குழுவினருக்கும் அதன் இயக்குநர் க.சத்தியசீலனும் ஆரோகண கலைக் கல்லூரியின் அதன் இயக்குநர் து.அயூரனுக்கும் இவ்வற்புதமான நாடகத்தை ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்தவரும் அரிய பல ஆங்கில மொழி நாடகங்களை தனது அயராத பணியால் மொழி பெயர்த்தவரும் குழந்தை ம.சண்முகலிங்கத்துக்கும் அவர்களுக்கும் மனது நிறைந்த நன்றியை தெரிவிப்பதோடு இவர்கள் அரங்கப் பயணத்தில் இணைந்துள்ள இவர்கள் யாவரும் ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றில் நிச்சயம் கதாநாயகர்களாகத் திகழ்வார்கள்.

## சென் ஜோன்ஸின் முன்னாள் ஆசிரியருக்கு விருதுகள் வழங்கி மதிப்பளிப்பு

வடக்கு மாகாணத்தில் பல்வேறு சமய - சமூக கல்விப் பணிகளை மேற்கொண்ட யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் சமாதான நீதவான் பாலசுந்தரம் காசிநாதருக்கு தேசாபிமானி. சமுக தீபம் ஆகிய விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டன.

கண்டி மாநகர முதல்வரால் கடந்த 17ஆம் திகதி மேற்படி விருதுகள் வழங்கப்பட்டன. மலையக கலை கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் இந்த மதிப்பளிப்பு இடம்பெற்றது. (ம-50)

## இறுவெட்டு வெளியீடு

பண்டிதர் நீ.சி.முருகேசுவால் நீர்வை கந்தனின் பெருமையை நினைவு கூர்ந்து இயற்றப்பட்ட பாடல்களின் இறுவட்டுகள் வெளியிட்டு வைக்கப்பட்டன. ஆலய பரிபாலன சபையின் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் இறுவட்டை வெளியிட்டு வைக்க அதன் முதல் பிரதியை ஆலய தலைமைக்குரு பிரம்மஸ்ரீ இராசேந்திர சுவாமிநாதக் குருக்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து வெளியீட்டுரை, கலந்துரையாடல், மதிப்பளிப்பு என்பன இடம்பெற்றன.

(ம-17)





# பிச்சை புகினும் கற்றல் இனிதே

## இலக்கியங்களில் ஊடுறும் கல்வியின் சிறப்பியல்

மனித வாழ்வியலில் படிமுறைகளில் முக்கியத்துவம் பெற்று விளங்குவது கல்வியாகும். ஒருவனுக்கு அவன் வாழும் வாழ்க்கையின் சிறப்புக்கு வழிவகுப்பது கல்வியாகும். கல்வியாலேயே இந்த உலகம் சிறப்புறுகின்றது என்கின்றன எமது இலக்கியங்கள். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பர். அதற்கமைய இளமை முதலே கல்வியை கற்றுக் கொள்கின்றோம். அந்தக் கல்வியினால் நம் அறிவாற்றலை வளர்த்துக் கொள்கின்றோம். இத்தகு கல்வியின் சிறப்பினையும் மேன்மையினையும் எமது இலக்கியங்கள் மற்றும் நீதி நூல்கள் அழகுற எடுத்துரைத்துள்ளன. அத்தகு தன்மைகளை இங்கு நோக்குதல் சிறப்புடையதாகும்.

### திருக்குறளில் கல்வி

உலகப் பொதுமறையாகிய திருக்குறளில் கல்வியின் சிறப்பினை கூறிடவே கல்வி எனும் அதிகாரத்தையை வைத்துள்ளார் வள்ளுவர். ஒருவனுக்கு அவனது வாழ்விலே கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். மற்றயவை எல்லாம் செல்வங்களே இல்லை என்கின்றார் வள்ளுவர். இதனை,

*கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு*
*மாடல்ல மற்ற யவை*

எனும் குறள் புலப்படுத்துகின்றது.

மேலும், கல்வி கற்றவர்களே தம் முகத்தில் இரண்டு கண்களை கொண்டிருப்பவர்கள் எனப்படுவர். கல்வி கல்லாதவரோ தம் முகத்தில் இரண்டு புண்களை கொண்டிருப்பவர்களாவர் என்கின்றார் வள்ளுவர்.

*கண்ணுடையர் என்பவர்*
*கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்*

அதாவது கல்லாதவர் முகத்தில் கண்கள் இருந்தும் அதில்,யாதொரு பயனும் இல்லை என்பதே வள்ளுவர் கருத்தாகும்.

அடுத்து, ஒருவன் தன் ஒரு பிறப்பில் கற்ற கல்வியானது அவனது ஏழு பிறப்பிற்கும் துணையாக அமையுமாம் என்கின்றார் பொய்யா மொழியார். இதனை

*ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்புடைத்து*

எனும் குறள் மூலம் காண முடிகின்றது. ஒரு பிறப்பில் கற்ற கல்வி அறிவானது ஒருவனது ஏழு பிறவிக்கும் மறந்திடமால் நீக்கமற நிறைந்திருக்குமாம். ஆக, கல்வியின் சிறப்பிற்கு வள்ளுவர் தரும் விளக்கத்தினை இவ்வாறு கண்டு கொள்ளமுடிகின்றதல்லவா?

### நாலடியார் கூறும் கல்வியின் மேன்மை

நான்கு அடிகளில் நீதிக் கருத்துக்களை கூறிடும் அற நூலாகிய நாலடியார் கூட கல்வியின் சிறப்பினை பின்வருமாறு உரைக்கின்றது.

*குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்*
*மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து*
*நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்*
*கல்வி அழகே அழகு*

அதாவது, கூந்தலை ஒழுங்கு படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட அழகும், மஞ்சள் பூசுவதால் வரும் அழகும் உண்மையான அழகல்ல. மனதளவில் உண்மையாக நடந்து கொள்கின்றோம் என்கின்ற நடு நிலைமையான ஒழுக்கத்தினை கற்றுத் தரும் கல்வி அழகே உண்மையான அழகாகும். ஒருவர் அழகுடையவர் என்றாலும் அவர் கல்லாதவராயின் அவர் அழகில் யாதொரு பயனும் இல்லை என்பது நாலடியார் தரும் கருத்தாகும்.

மேலும், கல்வி ஒருவனுக்கு இவ்வுலக இன்பத்தைத் தரும், பிறருக்குத் தருவதால் குறையாதது, கற்றவர் புகழை எங்கும் பரவச் செய்திடும், உயிரோடு இருக்கும் வரை அழியாது, ஆகவே எந்த உலகத்திலும் கல்வியைப் போன்றதொரு அறியாமையைப் போக்கும் மருந்து வேறில்லை என்கின்றது நாலடியார், இதனை,

*இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்*
*தம்மை விளக்கு மால் தாமுளராக் கேடின்*
*றால்*
*எம்மை யுலகத்தும் யாம் காணேம் கல்வி*
*போல் மம்மர் அறுக்கும் மருந்து*

எனப் பாடல் தெளிவுறுத்துகின்றது.

இது தவிர, கல்வி ஒருவர் மனத்திலிருந்து பிறரால் கவர்ந்து செல்ல முடியாதது. அது போல பிறருக்கு கொடுத்தாலும் குறையாதது. மேலான படை வலிமை கொண்ட அரசனாலும் கவர்ந்து கொள்ள முடியாதது. ஆதலால் ஒருவன் செல்வம் எனச் சேர்த்து வைக்கக் கூடியது கல்வி ஒன்றேயாகும் எனக் கல்வியின் சிறப்பதனை அழகுறக் காப்பியம் செய்கின்றது சமணமுனிவர் தந்த நாலடியார்.

### மூதுரை கூறும் கல்வியின் மாண்பு

ஔவையார் தந்த மூதுரை அரிய பல நீதிக் கருத்துக்களை கூறுவது. வாக்குண்டாம் எனும் மறுபெயரால் அறியப் படுவது. இந்த நூலிலும் கல்வியின் சிறப்பது பயிலப்பட்டுள்ளது.

*கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி*
*தானும் அதுவாக பாவித்துத் தானும் தன்*
*பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற்*
*போலும்*
*கல்லாதான் கற்ற கவி*

காட்டில் மயில் ஒன்று தோகை விரித்து நடனம் ஆடியதைப் பார்த்த வான் கோழி ஒன்று தன்னையும் மயிலைப் போலவே நினைத்து தன் அழகில்லாத சிறகினை விரித்து நடனம் ஆடியதாம். இதைப் போலவே கல்வி கற்காத ஒருவன் கவிதையோ அல்லது ஒரு விடையத்தையோ சொல்ல முற்படுவதால் யாதொரு பயனும் இல்லையாம். ஆக, வான்கோழி தோகை விரித்து ஆடினும் மயிலுக்கு இணையாகாது. அது போலவே கல்லாதவர் கவிதை பாடினாலும் அது கற்றவர் தன்மைக்கு இணையாகாது என்கின்றார் ஔவையார்.

குளத்தினில் மலர்ந்திருக்கும் தாமரை மலரினை அன்னப் பறவை சேர்ந்திருப்பது போல கற்றவர்கள் கற்றவர்களையே விரும்பிச் சேர்ந்திருப்பர். சுடுகாட்டில் உள்ள பிணத்தினைக் காகம் சேர்ந்திருப்பதைப் போல கல்வி அறிவில்லாத மூடர்கள் அறிவில்லாத மூடர்களையே எப்போதும் சேர்ந்திருப்பர். இதனை

*நற்றாமரைக் கயத்தில் நல்*
*அன்னம் சேர்தாற்போல்*
*கற்றாரைக் கற்றாரே காமுறுவர் – கற்பிலா*
*மூர்க்கரை மூர்க்கரே முகப்பர் முதுகாட்டில்*
*காக்கை உகக்கும் பிணம்.*

எனும் பாடல் தெளிவுறுத்துகின்றன

உலகப் பொதுமறையாகிய திருக்குற ளில் கல்வியின் சிறப்பினை கூறிடவே கல்வி எனும் அதிகாரத்தையை வைத்துள்ளார் வள்ளுவர். ஒருவனுக்கு அவனது வாழ்விலே கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். மற்றயவை எல்லாம் செல் வங்களே இல்லை என்கின் றார் வள்ளுவர்.


### பழமொழி நானூறில் கல்வியின் சிறப்பு

மனித வாழ்வியல் பயன்பாட்டில் பயிலப்பட்டு வருகின்ற பழமொழிகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பாடலில் வைத்து தொகுக்கப்பட்டதே இந்த நூலகும். இதில்கூட கல்வியின் பெருமை பேசப்படுகின்றது. பாடல் இதுவே,

*ஆற்றவும் கற்றவும் அறிவுடையார்;*
*அஃதுடையார்*
*நாற்றிசையும் செல்லாத*
*நாடில்லை – அந்நாடு*
*வேற்று நாடாகா தமவேயாம் ஆயினால்*
*'ஆற்றுணா வேண்டுவதில்'*

அதாவது, மிகுதியாகக் கற்க வேண்டிய நூல்களைக் கற்றவர்களே சிறந்த அறிவுடையவர் எனப் படுவர். அவ்வறிவு உடையவர்களது புகழ் நான்கு திசைகளிலும் பரவாத நாடுகளில்லை. அந்தநாடுகள் எதுவும் அயல் நாடுகளாகாது. அவ்வறிவுடையோரது நாடுகளே யாகும். கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதே இதன் கருத்தாடலாகும்.

இதையும் காணுங்கள், பாம்புகளின் கால்களை அந்தப் பாம்பு இனத்தின் ஏனைய பாம்புகளே அறியும் தன்மையுடையன. அது போல அறிவில் சிறந்த கல்வியுடையவர்களை, நிரம்பிய கல்வியறிவு உடையவர்களே அறிந்து கொள்வர். அது அறிவில்லாதவர்களால் இயலாததாகும்.



### கல்வியே மனிதர்க்கு வாழ்வளிக்கும் அருமருந்து

பிச்சை எடுத்தாயினும் கல்வியைக் கற்றிட வேண்டும் என இனியவை நாற்பது கூறுவது போல நிறைவான கல்வியை நாம் பெற்றிட வேண்டும். நம் மாணவர்களையும் முழுமையான கல்வி அறிவினைப் பெற்றிட வழி செய்திட வேண்டும். மேலும், அறிவினைத் தரும் நூல்களை எப்போதும் வயது பாகுபாடின்றி கற்றிடல் நன்றே. ஏனெனில் கல்வியின் துணை கொண்டே நாம் இனி வாழ்ந்திடல் இயலும்.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற திருப்பாடுகளின் திருக்காட்சி





















மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் ஏற்பாட்டில் 'அன்பின் காவியம்' திருப்பாடுகளின் திருக்காட்சி நிகழ்வு கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் கலையருவி வளாகத்தில் இடம்பெற்றது.

முதல் நாள் நிகழ்வுக்கு விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னான்டோ ஆண்டகை, மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்தாஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். மேலும் அருட்பணியாளர்கள், அருட் சகோதரிகள், ஆயிரக்கணக்கான இறைமக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## அன்பில் மலர்ந்த அமர காவியம்

### திருப்பாடுகளின் நாடகம் நாளை ஆரம்பமாகின்றது

திருமறைக் கலாமன்றத்தால் அரைநூற்றாண்டைக் கடந்து தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' என்னும் பெயரில் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற அரங்கில் நாளை மேடையேற்றப்படவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கும் வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கும் இந்த ஆற்றுகை இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தாயாரித்தளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருப்பாடுகளின் நாடக மரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது. இம்முறை மேடையேற்றப்படும் 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' நீண்ட வரலாற்றைக் கொண்டது.

நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துரு, நெறியாள்கையில் முதன்முதலாக 1969ஆம் ஆண்டில் உரும்பிராயிலும், அதனைத் தொடர்ந்து 1971ஆம் ஆண்டில் யாழ்.கோட்டை பெரும் மதில் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு முற்றவெளியிலும் மேடையேற்றப்பட்டது. இங்கு வரலாறு காணாத சனத்திரள் மத்தியில் இவ்வாற்றுகை மேடையேற்றப்பட்டமையும், பல்வேறு வரலாற்றுச் சம்பவங்களை பதிவாக்கிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பங்குனித்...

பாடு பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டனர்.
அங்கு வந்த பக்தர்களில் 8 பேர் தமது தங்க நகைகளைப் பறிகொடுத்துள்ளனர். 6 பேரிடம் விலையுயர்ந்த அலைபேசிகள் திருடப்பட்டுள்ளன. இவற்றைவிட சிலர் தீர்த்தக் கேணியோரம் வைத்து விட்டு குளிக்கச் சென்ற சமயம் பயணப் பைகளும் திருடப்பட்டுள்ளன.
ஆலயத்துக்கு வழிபாட்டுக்கு வரும் பக்தர்கள் தங்க நகைகள் அணிவதையும், விலையுயர்ந்த பொருள்களைக் கொண்டுவருதையும் தவிர்க்க வேண்டும் என்று ஆலயத்தினர் ஆரம்பம் முதலே அறிவுறுத்தி வந்தனர். மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் தொடர்ச்சியாக அறிவித்து வந்தனர். இருந்தபோதிலும் நகைகளும், பெறுமதிமிக்கப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (எ-9)

## மெல்ல...

சில தினங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேன, இலங்கையில் மீண்டும் சர்வாதிகார ஆட்சிக்கு இங்குள்ள மக்கள் இனிமேல் இடமளிக்க மாட்டார்கள். நாமும் அதற்கு இடமளிக்க மாட்டோம் என்று கூறியிருந்தார்.
அத்துடன், நான்தான் தற்போது சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் அரச தலைவராகவும் பதவி வகிக்கின்றேன். எமது கட்சியின் அடுத்த அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் நானே இறுதி முடிவெடுப்பேன். எமது கட்சி வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவது குறித்தும் நானே இறுதித் தீர்மானம் எடுப்பேன் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.
அதேவேளை, அரச தலைவர் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நிலைப்பாடு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச விரைவில் அதிரடி அறிவிப்பு வெளியிடுவார் என்று மகிந்த ராஜபக்சவின் ஆதரவு பெற்ற கட்சியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்துள்ளார்.
"வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்து ரணில் அரசைக் கவிழ்க்கும் அரிய சந்தர்ப்பம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தான்தோன்றித்தனமான செயலால் தவறவிடப்பட்டுள்ளது.
வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் சபையிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் வெளியேறியிருந்தமையை நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆகியன ஓர் இணக்கப்பாட்டுக்கு வரும் வகையில் இரு தரப்பும் பேச்சு நடத்தியிருந்தோம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தி இருந்தோம். ஆனால், முடிவு எதுவும் எட்டப்படாமல் இருந்தது.
வரவு -செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் மறைமுகமாக ரணில் அரசுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஆதரவு வழங்கியுள்ளனர். எந்த முகத்துடன் இனிமேல் சுதந்திரக் கட்சியினர் எம்முடன் பேச்சு நடத்தப் போகின்றார்கள்?
சுதந்திரக் கட்சியினரின் பொறுப்பற்ற செயலால் அவர்களுடன் கூட்டணி அமைக்க வேண்டாம் என சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் உள்ள உறுப்பினர்கள் பலரும் கூறுகின்றனர். சிறி லங்கா சுதந்திரக் கட்சி எமக்குப் பெரிய கட்சி அல்ல என்பது இதனூடாகப் புலப்படுகின்றது.
அரச தலைவர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றில் சிறி லங்கா பொதுமக்கள் முன்னணியின் நிலைப்பாடு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச விரைவில் அதிரடி அறிவிப்பை வெளியிடுவார்" என்று ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் யாரை வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும், மகிந்த ராஜபக்ச ஆதரவு அணியினருக்கு இடையேயும் முரண்பாடுகள் அண்மைக்காலமாக ஏற்பட்டிருந்தன. எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் மீண்டும் களமிறங்குவதற்கு மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் என்று சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால் மகிந்த ராஜபக்ச தரப்பினரோ ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே வேட்பாளராக வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.
இரு கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாகக் கருத்துக்கள் வெளியிட்டுவரும் நிலையில் எதிர்வரும் தேர்தலில் இரு கட்சிகளும் கூட்டாகக் களமிறங்கும் சாத்தியங்கள் குறைந்துள்ளன என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். (எ-22)

## நிலாவரையில்...

யாட்டுப் பொருள் என்று கருதி வீதியில் எறிந்த போது அது வெடித்துள்ளது. அதில் சிந்துஜன் படுகாயமடைந்தார்.
சிறுவன் உடனடியாக அச்சுவேலி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-26,106)

## குடும்பத்...

கணவருக்கும், மனைவிக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அதையடுத்து விசாரணை நடத்த அங்கு பொலிஸ் அலுவலர் சென்றுள்ளார்.
அங்கு சென்ற பொலிஸ் அலுவலரைப் பெண்ணின் கணவர் தாக்கியுள்ளார். சீருடையையும் கிழித்துள்ளார். தாக்குதலில் பொலிஸ் அலுவலர் காயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
தாக்குதல் நடத்தியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-7,26)

## கடற்படைக்காக...

என்று உரிமையாளர்கள் அச்சம் தெரிவித்திருந்தனர்.
அதேவேளை கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காணி கையகப்படுத்துவது தொடர்பாகப் பேசப்பட்டிருந்தது.
அதில் கருத்துத் தெரிவித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைருமான மாவை சோ. சேனாதிராசா, யாழ்ப்பாண மாவட்டத்தில் முறையற்ற விதத்தில் ஒரு துண்டுக் காணியைக் கூடப் பாதுகாப்புத் தரப்பினர் கையகப்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று தெரிவித்திருந்தனர்.
கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறிதரன், எதிர்வரும் 11ஆம் திகதி மண்டைதீவுப் பகுதியில் 11 பேருக்குச் சொந்தமான காணிகளைக் கடற்படையினருக்கு வழங்குவதற்காக அளவீடு மேற்கொள்ளப்படவுள்ளது என்று சுட்டிக்காட்டியிருந்தார்.
அதற்குப் பதிலளித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாராஜா, எமக்குத் தெரியாமல் எந்தக் காணிகளும் கையகப்படுத்துவதற்கு அனுமதி இல்லை. இது தொடர்பாக உரிய தரப்பினருடன் பேசுகின்றேன் என்று கூறியிருந்தார்.
இந்தநிலையில் காணி கையகப்படுத்துவதற்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளமையால் காணி உரிமையாளர்கள் அச்சமைடைந்துள்ளனர். காணியைக் கையகப்படுத்துவதற்கான அளவீடு தொடர்பில் பிரதேச செயலர், கிராம அலுவலர் ஆகியோருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.
காணி சுவீகரிப்புச் சட்டத்தின் இராண்டாம் பிரிவின்படி, நில அளவையாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் தொடர்பில் இதன்கீழ் கையொப்பம் இட்டிருக்கும் அரச நில அளவையாளர் கு.சுரேந்திரா ஆகிய நான் அவசியமான ஆளணியினருடன், வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 18 ஏக்கர் 1 நூட் 10 பேர்ச்சஸ் விஸ்தீரணம் உடைய காணியில் கடற்படை முகாம் அமைப்பதற்காகக் காணி சுவீகரிப்பதற்கான அளவீடு செய்வதற்காக 2019ஆம் ஆண்டு 04ஆம் மாதம் 11ஆம் திகதி 9 மணியளவிலும் தொடர்ந்து வரும் நாள்களிலும் அந்தக் காணிகளுக்குப் பிரவேசிப்பதற்குத் தீர்மானித்துள்ளேன் என்று தங்களுக்கு அறியத் தருகின்றேன் என்று அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## கொழும்பில்...

ரணை செய்யப்படுகின்றனர் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.
குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமூகக் கொள்ளை தொடர்பிலான விசாரணை அறைப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா கோட்டை நீதிவான் திஸாநாயக்கவுக்கு இதனைத் தெரிவித்தார்.
இந்த விவகாரம் தொடர்பில் முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என்றும், அவர் வழங்கிய வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மை தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது என்றும் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா நீதிவானிடம் தெரிவித்துள்ளார். (எ)

## தனியார்...

அமைக்கப்பட்டுள்ள 3 ஏக்கர் காணி தனக்குச் சொந்தமானது என்றும், அந்தக் காணியைத் துப்புரவாக்கச் சென்றபோது அருகில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்துகின்றனர் என்றும் அந்தப் பெண் கூறுகின்றார்.
"போரால் இடம்பெயர்ந்து 2006ஆம் ஆண்டு குடும்பத்துடன் இந்தியாவுக்குச் சென்றேன். 2017ஆம் ஆண்டு நான் மீண்டும் நாடு திரும்பினேன். எனது காணியைப் பார்க்கச் சென்றபோது அங்கு இரு கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நான் எனது காணியைத் துப்புரவாக்க முயன்றேன். காணிக்கு அருகில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அதற்குத் தடைகளை ஏற்படுத்துகின்றனர். அச்சுறுத்தும் வகையில் செயற்படுகின்றனர். தற்போது எனக்கு வீட்டுத் திட்டம் கிடைத்துள்ளது. காணிப் பிரச்சினையால் வீட்டை அமைக்க முடியாதுள்ளது.
எனது காணிக்குப் பின்புறமாக உள்ள காணி ஒன்றைத் தருகின்றோம் என்று வவுனியா வடக்குப் பிரதேச செயலர் கூறுகின்றார். ஆனால் அங்கு வசிக்க முடியாது. அது காட்டுப் பகுதியாக உள்ளது." என்று அந்தப் பெண் தெரிவித்தார்.
இந்த விடயம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பெண் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார். அது தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்றது.
காணிக்கு அருகில் உள்ள இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி, 56ஆவது படைப்பிரிவின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி, பிரதேச செயலக அலுவலர் ஆகியோர் ஆணைக்குழுவால் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.
எந்த அடிப்படையில் காணி விடயத்தில் நீங்கள் தலையிடுகிறீர்கள்? என விசாரணை அதிகாரிகளால் இராணுவத்தினரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.
தாம் அந்தப் பெண்ணை அச்சுறுத்தவில்லை என்றும், பிக்கு ஒருவர் விகாரை அமைந்த காணியை பராமரித்துத் தரவேண்டும் என்று கோரியமைக்கு அமையே அதைப் பராமரித்தோம். காணி தொடர்பான அதிகாரங்கள் தமக்கு இல்லாததால் இந்த விடயத்தில் இருந்து முற்றாக ஒதுங்கிக் கொள்கின்றோம் என்று இராணுவத்தினர் தெரிவித்ததுடன், அதை எழுத்து மூலமும் தந்தனர் என்று மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.
இந்த விடயம் தொடர்பாக வவுனியா வடக்குப் பிரதேச செயலர் க.பரந்தாமனிடம் கேட்ட போது, அந்தக் காணிப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது என்றும், கட்டடம் அமைக்கப்பட்டுள்ள இடத்துக்குப் பின்புறமாக அமைத்துள்ள காணி பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் பதிலளித்தார்.
ஆனால் தனது விருப்பத்துக்கு மாறாக அந்தக் காணி தரப்பட்டுள்ளது என்றும், தனது காணியே தனக்குத் தேவை என்றும் பாதிக்கப்பட்ட பெண் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.
இந்தப் பிரச்சினை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடமையில் இருந்த அதிகாரியான சட்டத்தரணி லீனஸ் வசந்தராஜாவிடம் கேட்டபோது,
முறைப்பாட்டாளரான பெண் இந்தியாவில் இருந்து நாடு திரும்பியவர் என்ற ரீதியில் நாம் ஆழமான கரிசனை கொண்டுள்ளோம். பிரதேச செயலகமே இந்த விடயத்தில் சரியான முடிவைவழங்க வேண்டும். பௌத்த விகாரை அமைந்துள்ள 7 ஏக்கர் காணி 2010ஆம் ஆண்டளவில் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தால் பௌத்த விகாரை அமைக்க வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்குரிய உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை. 2010 ஆம் ஆண்டளவில் மீள்குடியமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் காணியின் உரித்துத் தொடர்பாக முறையாக ஆராயாது பிரதேச செயலகத்தால் விகாரை அமைக்கக் காணி வழங்கப்பட்டுள்ளது.
இந்த விடயத்தில் காணியை உரிமை கோரும் பெண்ணின் சம்மதத்துடன், அவர் விரும்பும் தீர்வை வழங்குவதற்குப் பிரதேச செயலகம் முன்வர வேண்டும்- என்றார். (எ.க.110)

## கடலட்டை...

வரும் நிலையில் குடாநாட்டில் கடலட்டை பிடித்த தென்பகுதி மீனவர்களைக் குடாநாட்டிலிருந்தும் வெளியேற்றும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. தென்னிலங்கையிலிருந்து வந்து கடலட்டை பிடித்த நூற்றுக்கணக்கான மீனவர்களும் ஒரு சில உள்ளூர் மீனவர்களும் கடலட்டை பிடிப்பதிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.
இது தொடர்பாக உள்ளூர் மீனவர் ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார். அந்த முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்த யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர், மாவட்டச் செயலக அதிகாரியையும் அழைத்திருந்தார். விசாரணை முடிவில் மேற்கண்ட விடயத்தை எழுத்தில் அறிவித்துள்ளார்.
இதன் காரணமாக மீண்டும் குடாநாட்டு மீனவர்களின் பொருளாதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாக சில மீனவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, மனித உரிமை ஆணைக்குழு இணக்கத்தை ஏற்படுத்த முடியும் அல்லது ஆலோசனை வழங்கும் அமைப்பே அன்றி இவர்களுக்குக் கட்டளையிடும் அதிகாரம் கிடையாது. அதனால் அவர்களின் கூற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது -என்றார். (த-105)

## கிணற்றில்...

குமரநகரைச் சேர்ந்த கணேசன் ஜெசிகா (வயது-18) என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்துக்காகக் கோயில் சென்று திரும்பிய ஜெசிகா, கிணற்றுக்குச் சென்றுள்ளார். அவர் கிணற்றுள் விழுந்த சத்தம் கேட்டு அயலவர்கள் சென்று மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தபோதும், அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
யுவதியின் உயிரிழப்புகள் தொட்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அது தொடர்பான அறிக்கையை சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கையிட்டனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டார். (எ-9)



# சென்.அன்ரனிஸ் அணி றோயலிடம் வீழ்ந்தது

யாழ்ப்பாணம், ஏப். 10
வெள்ளையின் சிறப்பான கோல் பதிவின்மூலம் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டம் ஞாயிற்றுக்கிழமை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ்விளையாட்டுக்கழக அணி மோதியது.
ஆட்ட நேரமுடிவில் 1:0 என்ற கோல்க் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கியது. ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி சார்பில் வெள்ளை ஓர் கோலைப் பதிவு செய்தார். (ஒ.23)


## மரண அறிவித்தல்

### திருமதி பூபதி சின்னையா



பிறப்பு 10.06.1937 இறப்பு 09.04.2019

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பூபதிநேற்று (09.04.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சி.செந்தில்நாதன் (வவுனியா), சி.சுந்திரவதி (வவுனியா), சி.சோதிநாதன் (சுவீடன்), சி. சிவபாலன் (சுவீடன்) , பா.ஜெயவதி (மீசாலை), ஜெ. அஜந்தா (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.04.2019) புதன் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக குச்சிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு சாவகச்சேரி**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 5417519**


## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.10
வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி காலிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது.
3:1 என்ற கோல் கணக்கில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி பெற்றது.
அன்றைய தினம் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் இரணப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயம் விளையாட்டுக் கழக அணி மோதியது.
ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களை பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தகர்ப்பு உதை மூலம் இணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 3 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அன்றைய தினம் இடம் பெற்ற மற்றுமொரு காலிறுதி ஆட்டத்தில், முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செம்மலை உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ஒ.23)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 12.03.2019 செவ்வாய்க்கிழமை
அன்று இறைபதம் அடைந்த எமது
குடும்பத்தலைவி
அமரர்

### மகேஸ்வரி சுப்பிரமணியம்



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 11.04.2019 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நவாலி,*
*களையோடை அம்மன் வீதி, மானிப்பாய்.*

**குடும்பத்தினர்.**


## அஞ்சலோட்டப் போட்டிகள் துரையப்பாவில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 10
அரியாலை 100ஆவது ஆண்டு சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடத்தும் பாடசாலை மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான அஞ்சலோட்டப் போட்டிகள் இன்று புதன் கிழமை காலை 8 மணிக்கு துரையப்பா மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ஒ.23)

## வடமாகாண சதுரங்கம் கிளிநொச்சி சாதனை

யாழ்ப்பாணம், ஏப். 10
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட சதுரங்கப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி சம்பியனானது.
கொக்குவில் இந்துக் கல்லூரியில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஐந்து அணிகள் பங்குபற்றிய இந்தப் போட்டியானது 'றவுண்ட றொபின்' முறையில் நடைபெற்றது. அனைத்து அணிகளும் மற்றைய அனைத்து அணிகளுடனும் விளையாடின.
கிளிநொச்சி மாவட்டப் பெண்கள் அணியானது மற்றைய நான்கு மாவட்ட அணிகளையும் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. கடந்த மூன்று ஆண்டுகளாக இரண்டாம் இடத்தைப் பெற்ற இந்த அணி இம்முறை சம்பியனானது.
இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தை யாழ்ப்பாண மாவட்ட அணியும், மூன்றாம் இடத்தை மன்னார் மாவட்ட அணியும் பெற்றுக்கொண்டன.
ஆண்கள் அணிக்கான போட்டியில் முதலாம் இடத்தை யாழ்ப்பாண மாவட்ட அணியும், இரண்டாம் இடத்தை கிளிநொச்சி மாவட்ட அணியும், மூன்றாம் இடத்தை முல்லைத்தீவு மாவட்ட அணியும் பெற்றுக்கொண்டன. (ஒ)

## கலைவாணி வி.கவை அபாரமாக வென்றது குருநகர் பாடுமீன் வி.க.

யாழ்ப்பாணம், ஏப். 10
கெயின்ஸ், சாந்தன் இருவரினதும் சிறப்பான கோல் பதிவின் மூலம் அரையிறுதியாட்டத்துக்கு குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி தகுதி பெற்றது.
அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய மாவட்ட ரீதியிலான அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரில் காலிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் திங்கட் கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்றது.
குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதியது.
5:0 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி சார்பில் கெயின்ஸ் 3 கோல்களையும், சாந்தன் 2 கோல்களையும் பதிவு செய்தார்கள். (ஒ.23)

## கால்பந்தாட்டத்தில் நவசக்தி வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.10
வல்வை விளையாட்டுக் கழகம் நடாத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான கால்பந்தாட்டத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
நேற்று முன்தினம் திங்கட்கிழமை தீருவில் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது.
6:0 என்ற கோல் கணக்கில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

## அதிக...

பட்டுள்ளது.

அவற்றை நீக்காது தொடர்ந்து பயணிக்கும் வாகனச் சாரதிகள், வாகன உரிமையாளர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அறிவித்துள்ளது.

பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் அதிக சத்தத்தை எழுப்பும் "ஹோர்ன்"களை பயன்படுத்துவோருக்கும் 3 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை தண்டம் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## பாண்டியன்...

தார். அது தொடர்பில் மறுநாள் உறவினர்கள் மல்லாவிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். எனினும் அவர் பற்றி விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இந்தநிலையில் நேற்றுக்காலை ஒருவர் வயல் காணியைத் துப்புரவு செய்யப்போன போது அங்கு உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்றைக் கண்டு தகவல் தெரிவித்துள்ளார். அதையடுத்து சடலம் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மல்லாவிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-222)

## சோடாவென...

கைதடிக்கு வந்துள்ளனர். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவனே சோடா என்று நினைத்து மண்ணெண்ணையை அருந்தியுள்ளான். கடும் தாகத்தில் வந்த சிறுவன் சோடாப் போத்தலில் நிரப்பப்பட்டிருந்த மண்ணெண்ணையை சோடா என நினைத்து அருந்தியுள்ளான்.

சிறுவன் உடனடியாகச் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகச் சிறுவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளான் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)


### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி விதானையார் வீதியில் 1¼ பரப்பு காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

**077 614 6434**

### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, தலையாழி என்னும் இடத்தில் நிலப்பரப்பு 1½ விஸ்தீரணமுடைய வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.

**076 927 3612 - க.செல்வராஜா**

### காணி விற்பனைக்கு

மந்திகை அருகே 65 முதுபனைகளுடன் 6 1/2 பரப்பு காணி விற்பனைக்கு 2 - 3 பேர் பங்கிடலாம்.

**தொடர்பு -**
**077 9810961, 077 223 3376**

### மணமகள் தேவை

81இல் பிறந்த சூரியன்/செவ்வாய் உடைய இந்து கௌரவ தனுசு ராசி, சுயதொழில் செய்யும் ஆணிற்கு மணமகள் தேவை. சீதனம் எதிர் பார்க்கப்படமாட்டாது.

**தொடர்பு - 077 869 5084**

### வீடு, காணி விற்பனைக்கு

கொடிகாமம், பருத்தித்துறை வீதியிலிருந்து 1/4 மைல் தூரத்தில் வடவரணியில் அமைதியான இயற்கைச்சூழலில் 21/2 பரப்பிலான காணியில் அமைந்துள்ள அழகான வீடும், அதற்கு மிக அருகில் வீடு கட்டுவது, தொழிற்சாலை அமைப்பது, பயிர் செய்வது எதற்கும் உகந்த 32 பனைகள் நிற்கும் 9 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. **- 077 235 4069**

### காணி விற்பனைக்கு

அரியாலையில் A9 வீதியையும் செம்மணி வீதியையும் இணைக்கும் விளையாட்டு அரங்க குறுக்கு வீதியில் இரு வீதியிலிருந்தும் 150 யார் தூரத்தில் 2000ஆம் ஆண்டு மேட்டுக் காணி ஆக்கப்பட்ட 07 வயற்பரப்புக் காணி **விற்பனைக்கு உண்டு.**

**தொடர்பு - 077 235 4069**

### கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் சாரதியாகக் கடமையாற்றும் சி.ச.பதுர்சிகன் அவர்களின் அன்புத் தந்தை

**சின்னத்துரை சற்குணரத்தினம்**

அவர்கள் கடந்த 07.04.2019 காலமானதை யிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

### உடன் விற்பனைக்கு

**புள் டோசர் - D2 Five sytem**
**தட்டுலொறி- BMC மொக்கன்**

தொடர்புகளுக்கு:
**077 402 1748/ 076 356 7286**

### தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகளுக்கிடையிலான கூட்டம்

12.04.2019 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களின் நிர்வாகிகளுக்கிடையிலான அவசரமானதும் அவசியமானதுமான கலந்துரையாடல் நடைபெற இருப்பதனால் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இடம்:** கிளிநொச்சி மத்தியகல்லூரி பொது மண்டபம்

**தலைவர்**
**தனியார் கல்வி நிலைய ஒன்றியம்**
**கிளிநொச்சி மாவட்டம்**

### சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

**பதிவு இல - J/1594** **பதிவு திகதி – 11.03.1972**

#### பதவி வெற்றிடம்

**01.** பதவி - இலிகிதர் (01)
குறியீட்டு இல. - 302/14 (13/2015 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 13875 - 115 X 10 - 125 X 10 - 16275
பால் - ஆண் / பெண்

**தகைமைகள் :-**

அ. கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு(02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத் திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு(04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க.பொ.த.(சா.த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**02.** பதவி - விற்பனை உதவியாளர் (03)
குறியீட்டு இல. - 308/15 (13/2015 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 13515 - 110 X 10-120 X 10 - 15815
பால் - ஆண்

**தகைமைகள் :-**

அ. கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஐந்து(05) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) அல்லது க.பொ.த.(சா.த) எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி.

**குறிப்பு :-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப் பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கு அமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னரும் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி – 25.04.2019**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விற்பனை உதவியாளர்(308/17) பதவிக்கான விண்ணப்பம்/எழுதுநர் (302/14) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு 25.04.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்**
**டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**
**10.04.2019**

**பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**
**கூட்டுறவுச் சேவையிலுள்ள**
**தலைவர்**
**திரு.வ.தெய்வேந்திரம்**

### மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின்
பீடாதிபதி

**கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம்**

அவர்கள்
பட்டங்கள் பலபெற்று
பாரினில் சிறப்புற
பதவிகள் பல வகித்து
பீடாதிபதியாக திகழ்ந்த நாயகனே
வாழ்த்துகின்றோம் உம்மை நீடூழி காலம் வாழ்க

**வாழ்த்துவோர்,** **திருமதி**
**நாகரெத்தினம் இராசலெட்சுமி**
**குடும்பத்தினர்.**

வேலணை மேற்கு,
வேலணை - 8ஆம் வட்டாரம்.

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03 . 02 . 1922

மறைவு
12 . 04 . 2016

அமரர்
**சின்னப்பா ஐயாத்துரை**

(இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்)

திதி: பூர்வபக்க பஞ்சமி

எம்மை அன்போடு அரவணைத்து
எங்களிற்கு வழிகாட்டியாய் திகழ்ந்த ஐயா!
எங்களை விட்டு நீங்கள் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுகள்
எம் மனதில் நிலைத்து நிற்கும்

சரசாலை தெற்கு,சாவகச்சேரி. **குடும்பத்தினர்.**

### மரண அறிவித்தல்



**பாலசிங்கம் பீதாம்பரம்**

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் பீதாம்பரம் நேற்று (09.04.2019 ) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் வாலாம்பிகையின் (வேவா) அன்புக் கணவரும், நிறைகஷன் (பிரான்ஸ்), ஜெகன் (ராசா - பிரான்ஸ்), றஜீலன், றஜன் (இலங்கை வங்கி - மானிப்பாய்), ஜெகனா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசல்யா (பிரான்ஸ்), இந்துஜா (பிரான்ஸ்), வசந்தி ஆகியோரின் அன்பு மாமனும், றிதுஷன், சதுர்ஜன், நிதுறிஜன் (பிரான்ஸ்), றிதுஷா, றிகன்ஷன், ஹனிஸ்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும்,நித்தியானந்தம், செல்வராணி, பாக்கியராணி ஆகியோரின் அன்பு சகோதரனும், விஜயா, காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சின்னத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவேடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாகம்மாள் கோயில் வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# டோனியின் வலையில் வீழ்ந்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ்



12ஆவது ஐ.பி.எல். தொடரின் 23ஆவது போட்டியில் சென்னை - கொல்கத்தா அணிகள் மோதிய போட்டியில் சென்னை அணி 7 இலக்குகளால் இலகு வெற்றி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் கொல்கத்தா அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. கொல்கத்தா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கிறிஸ் லின், சுனில் நரைன் களமிங்கினர். அணி 50 ஓட்டங்களை எட்டுவதற்குள் 6 இலக்குகளை இழந்து பரிதவித்தது. சாஹர், ஹர்பஜன், தாகீர் என சென்னையின் பந்து வீச்சாளர்கள் கொல்கத்தா அணியின் துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலையச் செய்தனர். அதிரடி ஆட்டக்காரர் ரசல் பந்துகளை எல்லைகளுக்கு அப்பால் அடிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டார். தாஹீர் வீசிய 13ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இரண்டாவது பந்தில் ரசலின் பிடியெடுப்பொன்றை ஹர்பஜன் தவறவிட்டிருந்தார். அவர் ஆட்டமிழக்காது 44 பந்துகளில் 50 ஓட்டங்களை எடுத்ததே அணியின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகக் காணப்பட்டது. அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 108 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்து வீச்சில் சாஹர் 3 இலக்குகளையும், ஹர்பஜன், தாகீர் தலா இரண்டு இலக்குகளையும், ஜடேயா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலகு இலக்கை விரட்டக் களமிறங்கிய சென்னை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வற்சன், டூ பிளசிஸ் களமிறங்கினர். அணி 18 ஓட்டங்களைப் பெற்ற போது வற்சன் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணி 17.2 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை இலகுவாக எட்டியது. டூ பிளசிஸ் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

பந்து வீச்சில் சுனில் நரைன் 2 இலக்குகளையும், சாவ்லா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சென்னை அணி வீரர் சாஹர் தெரிவு செய்யப்பட்டார்.


ராசி அதிர்ஷ்டம்
திகதி 09.04.2019 | வெற்றி வாரம் 2495 | வர்ணம் சிவப்பு
தனுசு
வெற்றி இலக்கங்கள் 10 15 30 32
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 679, 582/=
09.04.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 430
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.04.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூ. 121,169,833/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள் U 10 25 28 60
விகோ மோட்டார் வாகனத்தினை வெற்றிப் பெற்ற இலக்கம் மற்றும் மாவட்டம்
3596336
கம்பஹா மாவட்டம்
ரூ.100,000/- பணப்பரிசினை வெற்றிப் பெற்ற இலக்கம் 31552
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 580
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.04.09
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,305,215/-
வெற்றி இலக்கங்கள் 11 13 60 67 Z
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

IELTS உயர் பெறுபேற்றிற்கான உத்தரவாதம்
மே 23 இல் நடைபெற இருக்கும் IELTS பரீட்சைக்கான தயார்படுத்தல் வகுப்புகளில் நீங்களும் இணையமுடியும்!
சனி ஞாயிறு பிரிவுகள்
1.காலை 08-10 2.மதியம் 02-04
முதல் வகுப்பு இலவசம்!
வாரநாள் வகுப்புகள் திங்கள் முதல் வியாழன்வரை
பிரிவு1. காலை 08-10 பிரிவு2. மாலை 03-05
பயிற்சிகளில் இணைய நாளைவரை முன்பதிவு செய்யமுடியும்
SAAMSON Expert in Language Training
403, வெலிங்டன் சந்தி யாழ்நகர். 077 621 4567 021 222 4282



## தேவை

சிறு கைத்தொழில் உற்பத்தியில் நீண்டகாலமாக இயங்கிக் கொண்டிருக்கும் எமது நிறுவனத்திற்கு புதிதாக கைத் தொழில் பழக விரும்புபவர்கள் தேவை. எனவே பழக விரும்புபவர்கள் 21 வயதிற்கு மேற்பட்டவரும் 50 வயதிற்கு உட்பட்ட அனைவரும் விண்ணப் பிக்கலாம்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி,**
**விளம்பர இலக்கம் 1007**
**உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட்**
**இல. 361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(CS 24621/15/18)



## விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தியில்
அமைந்துள்ள
புதிய கடை விற்பனைக்குண்டு.
077 190 9253 (CS 24619) (11.17)



## வாடகைக்கு

நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற 2 அறை வீடு, A/C, சமையலறை Parking வசதியுடன் குறுகிய கால வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 0777 887 360



SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 955
சீட்டிழுப்பு திகதி 2019.04.08 திங்கட்கிழமை
K 18 24 59 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,200,504/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 12.03.2019 செவ்வாய்க்கிழமை
அன்று இறைபதம் அடைந்த எமது
குடும்பத்தலைவி
அமரர்

### மகேஸ்வரி சுப்பிரமணியம்



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 11.04.2019 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நவாலி,*
*களையோடை அம்மன் வீதி, மானிப்பாய்.*

**குடும்பத்தினர்.**


## தேவை

யாழ். நகரில்
இயங்கும் கல்வி
நிறுவனமொன்றுக்கு
அலுவலக
உதவியாளர்
(Clerk - பெண்)
உடன் தேவை.
077 459 8440

பிறிமியர் என்டெர் பிறைசெஸ்
சித்திரை புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு விலைத்தள்ளுபடி






771, சிவலிங்க புளியடி, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
பருத்தித்துறை வீதி, குஞ்சர்கடை சந்தி, நெல்லியடி.
076 443 1545 , 076 362 6615

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி. ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 20.04.19 சனி காலை 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 22.04.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.